ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ. 3—0
6-மாத சந்தா ,,	— ,, 1—12
வெளி நாட்டிற்கு ,,	— ,, 5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
கொட்டித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஸு பங்குனி-மீ 6-உ (19—3—1933) | மலர் 47.

"சுயமரியாதை இயக்கம் துவக்கப்பட்டதற்குக் காரணம் இந்நாட்டு மக்களுக்கு சுயமரியாதை இல்லை என்பதோடு பொதுவாகவே தென்னாட்டு மக்களுக்குச் சுயமரியாதை இல்லை, நமது நாட்டு மக்களின் தருமத்தின் மூலமாகவே நமது சுயமரியாதை கெடுகின்றது"

R. K. S.

"மதநடுநிலைமை வகிக்கும் அரசாங்கமும், சுயராஜ்யமும் அமைந்தாலல்லது நமக்கு உண்மை விடுதலை வரப்போவதில்லை"

"சுயமரியாதை இயக்கமானது இந்தியாவிலுள்ள எல்லா மக்களுடையவும் அரசியல் விடுதலையையும், சமூக விடுதலையையும், பொருளாதார விடுதலையையும் உண்டாக்கித் தீருமென்பதில் எனக்கு சந்தேகமில்லை"

R. K. S.

இந்திய சட்டசபைத்தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட
சுயமரியாதை சங்கத்தலைவர்,
தோழர். R. K. ஷண்முகம்.

இந்தியாவின் குறைபாடுகள்.

The Crux of the Indian Problem

என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.

இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய்
அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D; Sc., அவர்க
ளால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர்
அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூல் (+இன் தமிழ்
மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சீர்கேடு, மதம், மதபுத்த
கங்களும் அவற்றிலுள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மரணம், ஒழுக்கம், சோதி
டமும் சகுனமும், முதலியனபற்றிய ஆராய்ச்சியும், கண்டனங்களும்நிறைந்த கட்
டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற மணிவாசகங்கள்,
இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொரு
வரும் படிக்கவேண்டுவதவசியம். முகவுரை, முடிவுரையுடன் 160 பக்கங்களுக்கு
மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட
அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு
சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும்
தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளது.

இதன் விலை அணு	0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு ...	0—6—0

மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு
கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி கெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு
கட்டும் ஓர் அறிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது.
பிரதி ஒன்றுக்கு விலை அணா. 0—6—0

மானேஜர்

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

"மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்"

விலை ரூ. 2. (தபால் சார்ஜ் வேறு)

மாதத்தில் மோட்டார் டிரைவிங் அன்று மெக்கா
னிசம் கற்றுக்கொள்ளலாம். தொழில் முறையில் தேர்ச்சி
பெற தக்க சமயம். எம்மிடம் கிடைக்கும்.

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

சாதி உணர்ச்சியை ஒழிப்பது பணக்காரத்தன்மையை ஒழிப்பதாகும்.

Ready for Sale! Ready for Sale!!

The Crux of the Indian Problem
By Dr. Paranjpye M. A., D. Sc.

English Print. Well gotup. Neatly bound.

Price per copy	Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu	As. 0—8—0

Can be had of:-

Kudi Arasu Book Depot. Erode.

சென்னை லோகல் போர்டு ஆக்டு.

(1930ம் ௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A. B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி. பி செலவு ரு. 5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

பாதிரிகளும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(செனிக்யூ பாதிரியார் எழுதியது)

(முன் தொடர்ச்சி)

பிரதிவாரமும் அவளுடைய தகப்பனர் வீட்டில் சந்தித்த ஓர் அழகிய இளம்பெண், ஒரு நாள் என்னிடம் பாவமன்னிப்புபெற வந்தனள். அப்போது நானும் ஒரு வாலிபனுகவே இருந்தேன். அவளுடைய தோற்றமும், செயலும் எனக்கு யாதொரு ஆச்சரியத்தையும் விளைவிக்கவில்லை. அவள் பலதடவைகளில், எனக்குத் தெரிந்த மற்ருெரு பாதிரியிடம் பாவமன்னிப்புப் பெற்று வருவதை நான் நன்கறிவேன். அந்நகரில் மிக்க பக்தியுடையவளென்பதாகவே அனைவரும் அவளைக் கருதி வந்தனர். அவள் தன்னுடைய தோற்றம்வெளிப்படாதபடி முகமூடி யணிந்து மாறு வேடமாகவே வந்தனளெனினும், நான் அவளை மேரி தான் என்பதாக நன்ருக உணர்ந்து கொண்டேன்.

அவள் என்னை அறியாதவள் போல் நடித்தமையின், நானும் அறிமுக மில்லாதவன் போலவே அமர்ந்திருந்தேன். ஆரம்பத்தில் வாய் விட்டுப் பேச முடியாமல் தேம்பித்திகைத்தனள். எங்கள் இருவருக்கும் இடையிலிருந்த துவாரத்தின் வழியாக நான் பார்த்த போது அவளது இரு கண்களினின்றும் கண்ணீர் ஊற்றெனப்பெருகி கன்னங்களின் மேல் வழிந்தவாறிருந்தது.

வெகு தூரம் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு பின்வருமாறு என்னை நோக்கி கூறலானுள். "எனது அருமை ஞானத் தந்தையே! தாங்கள் என்னை அறியீரென்றே நம்புகின்றேன். என்னைப் பற்றி அறிந்து கொள்ளவும் பிரயத்தனப்படாமலிருக்கும்படி மிகவும் மன்ருடி முன்னுடியே கேட்டுக்கொள்ளுகிறேன். நான் ஒரு படுபாவி ஐயோ! நான் இனிக் கரையேறுதல் எவ்வாறு? நான் நற்கதி அடைவதற்கு ஏதாவது மார்க்கம் இருப்பின், அக்கர்த்தனுக்காக என் மீது கடிந்து விழாமல் வழி காட்டுவீராக. பாவ சங்கீதத்தை ஆரம்பிக்கு முன்னர், நான் மன்ருடிக் கேட்டுக் கொள்வதென்னவெனின், பல பாதிரிகள் இதற்கு முன்பாக என்னிடம் பலகேள்விகளைக் கேட்டது போலீங்கள் கேட்காமலிருப்பீராக. அத்தகைய கேள்விகளே என்னை இத்தகைய பாவ நிலைக்குஇட்டுச் செல்வதாயின.

நான் சுமார் பதினேழுவயதுடையவளாக இருந்தபோது கடவுள் சாட்சியாக தெய்வலோகப் பெண்ணேபோன்று அத்தனை புனிதமாக இருந்த என்னிடம் நான் படித்து வந்த கன்னிகா பாடசாலையின் தலைவராக இருந்த ஒரு பாதிரியார் (Chaplain) பாவ சங்கீதனகாலத்தில் எனக்கே அர்த்தம் தெரியாத சில கேள்விகளைக்கேட்டார். அம்மாதிரியே என்னுடைய சினேகி ஒருவளிடமும் அவர் கேட்டிருந்தார். ஆனல் அவளுக்கு அவற்றின் விபரம் நன்கு தெரிந்திருந்தமையின் அக்கேள்விகளை அறியமுடியாமலிருந்த என்னை ஏளனம் செய்து அவற்றின் விபரங்களைத்தெளிவாக எடுத்துக்கூறினுள். அந்நாளிலிருந்து என் மனதில் அதுவரையில் எழாமலிருந்த பல எண்ணங்கள் பிரமாதமாகக் கிளம்பி என்னுள்ளத்தில் அல்லும் பகலும் குடிகொள்வதாயிற்று. அவற்ருல் நான் செய்த பாவகிருத்தியங்களை நான் என்னவென்று கூறட்டும். என்னுடலிலுள்ள இரத்தத்தைக்கொண்டு கழுவ நான் முற்படினும் அது அகலாதென்பது திண்ணம். எனினும் பாவச்செயல்களால் கிடைக்கும் ஆனந்தம் நிரந்தரமாகுமோ? அந்திய காலத்தில் ஏற்படக்கூடிய கர்த்தனுடைய ஆக்கினைக்கு பயந்து உடனே அப்பாவ கிருத்தியங்களை வெறுத்து கர்த்தனையே நாடுவேனுனேன், எனக்கு நேர்ந்த மானக்கேட்டையும் மதியாமல் அங்கம்பதறியவளாய் என்னுடைய முதல் பாதிரியிடமே (Confesser) பாவமன்னிப்பு பெறுவதாகச் சென்றேன். நான் செய்த சகல பாவச்செயல்களையும் விபரமாகக்கூறினேன் எனினும் ஞானகுரு என்ற அபிமானத்தால் ஒரு பாவத்தைமட்டிலும் மறைக்கவேண்டியதாயிற்று. ஆனபோதிலும் அவர் முதல்முதலில் என்னிடம் கேட்ட ஆபாசக்கேள்விகளே எனது ஆத்ம நாசத்திற்கு வித்தாகிய விஷயத்தை மட்டிலும் விபரமாக அவர் நன்குணரும்படி தெரிவித்தேன்.

முதலில் அவர் மிக்க அன்போடுவார்த்தையாடி, பாவ எண்ணங்களை அடியோடு தொலைக்கவேண்டும் என்பன போன்றபல ஆறுதலான உபதேசங்களைச்செய்தார். நான் விடைபெற்றுக்கொண்டு வெளியேற நினைக்கும்போது அவர் இரண்டு கேள்விகளை என்னிடம் கேட்டார். ஹா! ஏசுவினுடைய இரத்தமும் மற்றும் நரக லோகத்திலிருக்கும் அக்னியும் சேர்ந்து அவைகளை அழிக்க முற்பட்டபோதிலும், அவற்றிலுள்ள பாவக்கொடுமையைப்போக்க முடியாதென்பேன்! அக்கேள்விகள் என்னையே கொள்ளைகொண்டன. இரண்டு கொடிய பாணங்களே போன்று என் மனதை ஊடுருவி அல்லும் பகலும் எனது புத்தியைக் கலைத்து, எனது இரத்தத்தில் விஷத்தையும் மூட்டிவிட்டன.

முதலில் அவைகள் எனக்குப் பீதியையும் அருவருப்பையும் உண்டாக்கியது எனினும் அடிக்கடி அவைகள் தோன்றியதால் அதிலுள்ள பயம் என்னுடைய இயற்கை ஆசை எண்ணமாக மாறி, எண்ணற்ற பாதக எண்ணங்களை கொண்டஆசைகளையும், செயல்களையும் மேற்கொள்ள ஆதரவாக அமைந்தன.

ஒவ்வொரு மாதமும், நாங்கள் பாதிரியிடம் சென்று பாவமன்னிப்புப்பெறவேண்டுவது, கன்னிகா மாடத்தின் திட்டமாதலின், மறு மாதம்பாவசங்கீதனத்திற்காகச்சென்றேன். ஆனல் அப்போது என் மனம் முற்றிலும்மாறுபட்டுவிட்டது. முன்போலவே ஆண்மகனிடம் இவ்விதமான ஆபாச விஷயங்களைப்பற்றிப் பேசும் போது நான் அடையவேண்டிய நாணம் மாறி, இன்னும் அதிகமாக அவற்றைப்பற்றிப் பேசவேண்டுமென்ற ஆவல் அதிகரிக்கத்தலைப்பட்டது. பாவ மன்னிப்புக்கொடுக்கும் பாதிரி அநேக ஆபாசக் கேள்விகளை முன்னிலும் அதிகமாகவே கேட்க ஆரம்பித்தாரெனினும், அவ்வளவும் கூட எங்களுக்குத் திருப்தி கொடுக்கப் போதுமானதாக இல்லை. இன்னும் அதிகமாகக் கேட்கமாட்டார் என்றும் அவற்றை அதிக நேரம் நானே வலியப்பேசவும் ஆவல்கொண்டேன்.

உண்மையில் நாணம் சிறிதுமின்றிப் பல விஷயங்களையும் நானே சொன்னேன் எனினும், அப்போதுகூட அப்பாதிரி சும்மா இருந்தானில்லை. மேற்கொண்டும் என்னென்னமோ, பல ஆபாசக்கேள்விகளைக் கேட்டவாறேஇருந்தான். அவன்கேட்ட கேள்விகளால் எனது பாழ்பட்ட மனதில் இன்னும் எத்தகைய ஆபாச எண்ணங்கள் விதைக்கப்பட்டன வென்பதைக் கர்த்தரே உணர்வார். ஒவ்வொரு கேள்வியும் எனது உணர்ச்சிகளைத் தூண்டி, விகாரம்கொண்ட மனவெழுச்சிகளை கிளப்பி விடுவதாகவேயிருந்தன. இம்மாதிரியாகஒரு மணி நேரம் சரசமாக வார்த்தையாடின பிறகு, நான் எம்மாதிரி கட்டழிந்திருந்தேனே, அம்மாதிரியே அப்பாதிரியும் மனமுருகி அவதிப்பட்டுக் கொண்டிருப்பதைக்கண்ணுற்றேன். சில சைகைகளோடு கூடிய குறிப்பான வார்த்தைகளால் அவனது உள்ளப்பாங்கை விவரிக்க, நானும் குறிப்பாக பதில் கொடுத்தேன். இவ்விதமாக ஒரு வருஷ காலம் மிக்க பாவகரமான சம்பந்தத்தில் நான் இந்தப்பாவ சங்கீர்த்தன வாழ்க்கை நடத்தினேன். அந்தப்பாதிரி என்னைவிட அநேக ஆண்டு மூத்தவனுக இருந்த போதிலும், முட்டாள் தனமாக நான் அவனை நேசித்தே வந்தேன். கன்னிகாமாடத்தில் என்படிப்பு எல்லாம் இவ்வாறேகழிந்ததால், எனது பெற்ருேர்கள்என்னைத்தங்கள் ஊருக்கு வரவழைத்துக்கொண்டனர். இந்த மாறுதல் எனக்கு மிக்க திருப்தியையளித்தது. ஏனெனின், இம்மாதிரி திருட்டுத்தனமாக ஆபாச வாழ்க்கையை நடத்துவது எனக்கு மிக்க அதிருப்தியையே அளித்தது. எனவே நான் ஊர் சென்று மற்ருெரு நல்ல பாதிரியின் உதவியால் உண்மையான கிறிஸ்து சன்மார்க்க நெறியில் நடக்கலாமென்ற புதிய எண்ணம் ஒன்று உதித்தது.

எனது துர் அதிர்ஷ்ட வசத்தினுல், இம்முறையும் மற்ருெரு வாலிப பாதிரியின் கையில் சிக்குண்டு, முன்போலவே அவன் கேட்ட கேள்விகளால் மயங்கி, கற்பழிந்து நாசகதிக்காளானேன். இந்தப்பாதிரியின் தூண்டுகோளினுல் நான் செய்த காரியங்களை வாய்விட்டுச் சொல்வதானுல் இது போன்ற பாவ சங்கீதனப் பெட்டியினருகிலிருந்துஒருபெண்

மற்றொரு ஆண் மகனிடம் கூறுவதைப் போன்ற கொடிய ஆபாசம் வேறொன்று உலகத்தில் இராதென்றே நம்புகின்றேன்.

நான் செய்த பாவ கிருத்தியங்களை அந்த பாதிரியின் மேல் சுமத்த எனக்கு இஷ்டமில்லை. ஏனெனில் அவரைப் பார்க்கிலும் நானே மனமுவந்து அவற்றைச் செய்ய ஆவல் கொண்டவளாயிருந்தேன். அவன் மிக்க நல்ல குணமுடையவனும் ஏசு பக்தனுகவுமிருந்தான். ஆனால் அவன் கேட்ட கேள்விகளுக்கு நான் கொடுத்த விடைகளானது அவன் மனதை அனலிலிட்ட மெழுகைப்போலுருகச் செய்து விட்டன.

நமது கிறிஸ்தவ சபையின் கட்டளைப் பிரகாரம் நான் பாவ மன்னிப்புப் பெறுவதற்காக இவ்வளவு விஷயங்களைக் கூற வேண்டியதில்லையெனினும் கொடூரமான பெருத்த பாவங்கள் அநேகவற்றைச் செய்த நான் அவற்றின் சரித்திரத்தையும் விபரமாய் விளம்பக் கடமைப் பட்டிருக்கிறேன். இம்மாதிரியாக பல வருஷங்களை நான் கழித்து வந்தேன். ஆனால் சென்ற புண்ணிய தினத்தில் (Sabbath) தான் கடவுளின் கிருபை எனக்குக் கிடைத்தது. "கெட்ட குமாரனை"யொத்த எனக்கு அவர் உண்மை வழியைக் காட்டி அவருடைய அபார அன்பிற்குப் பாத்திரவாளியாகும்படி எனக்கு உண்மை காண்பித்துள்ளார். அந்நாளிலிருந்து அல்லும் பகலும் அவரையே அழுது தொழுதவளாயிருந்தேன். இப்பொழுது கூட நான் செய்த பாவங்களின் நினைவும் கர்த்தருடைய பாதாரவிந்தத்தை என் கண்ணீரால் கழுவியதைப் போன்ற பாக்கியம் கிடைக்குமென்ற எண்ணமும் சேர்ந்து என் நாவு எழாதபடி செய்கின்றன.

நான் எனது பழைய பாவமன்னிப்புக் கொடுத்த பாதிரியாரை, பாதிரியை முற்றிலும் மறந்து விட்டேன் உம்மையே சரணுகதியடைகின்றேன், கர்த்தருக்காக என்னைக் கண்டித்துத் தூரத்தாமல் காப்பாற்றுவீராக. இந்தப் படுபாவி தங்கள் அருகில் வந்திருப்பதற்காக பயப்படாதிருப்பீராக, ஆனால் தங்களிடமிருந்து முன்னமே இரண்டு வாக்குத் தத்தங்களைக் கேட்டுக் கொள்கிறேன் முதலாவதாக என்னுடைய பெயர் இன்ன தென்று அறிய ஒரு பொழுதும் பிரயத்தனப்படக் கூடாது; இரண்டாவதாக முன்னால் எவ்விதக் கேள்விகளால் நானும் பல பாதிரிகளும் பாழடைந்தோமென்று கூறினேனே அவ்விதக் கேள்விகளை நீங்கள் கேட்காதிருக்க வேண்டும். அவ்விதக் கேள்விகளால் இருமுறை மோசம் போயிருக்கிறேன். நாங்கள் பாவ மன்னிப்புப் பெற ஞானத்தந்தைகளிடம் (பாதிரிகளிடம்) வரும்போது அவருடைய ஆத்மஞான தீர்த்தத்தால் எங்களுடைய பாபத்தைக் கழுவி சுத்தமடைய எதிர் பார்க்கின்றோம். ஆனால் அவர்கள் எங்கள் ஹிருதயத்தில் சுடர் விட்டெரியும் பாவாக்கினியின் மேல் தங்களுடைய ஆபாசக் கேள்விகளாகிய எண்ணெயையே சொரிகின்றார்கள். ஆதலின் ஞானத் தந்தையே! என்னை ஏற்றுக் கொண்டு மேக்டலீன் (Magdalene) போன்றோர் கர்த்தருடைய பாதார விந்தத்தைச் சேர்ந்தது போல் என்னையும் அருகதையுடையவளாகச் செய்வீர்களாக. அவளெப்படி பாவமன்னிப்புப் பெற்று நற்கதி யடைந்தாளோ அவ்வாறே நானும் அடைய முற்படுகின்றேன். மேகடலேனிடம் கடவுள் ஏதாவது கேள்வி கேட்டதுண்டா? தங்கள் சுயமரியாதை உணர்ச்சிக்குமாறாக அவளை தன்னுடைய பாவகிருத்தியத்தின் சரித்திரத்தை வெளியிட்டுரைக்கும்படிவற்புறுத்தி இருக்கின்றாரா? இல்லையன்றோ? அவள் கண்ணீரையும் பெருகிய அன்பையும் அன்றோ அவர் கண்டு பாவ மன்னிப்புக் கொடுத்ததாக நீங்களே எனக்குப் பல முறை கூறியிருக்கின்றீர்கள், அதுபோன்றே தாங்களும் என்னைத் தொந்திரவு செய்யாமல் காப்பாற்றுவீராக." என்று சொன்னாள்.

நான் அப்பொழுது ஒரு வாலிபனுகவே இருந்தேன் பாவ மன்னிப்புப் பெற என்னிடம் வந்த ஒருவரிடத்திருந்தாவது நான் இத்தகைய உண்மை யுரைகளை உணர்ந்ததில்லை. அவள் வெளிப்படையாகக் கூறிய வாய் மொழிகளும் தேம்பி யழுததால்வெளிப்பட்ட கண்ணீரும் என் மனத்தைக் கவர்ந்து என்னை வெகு நேரம் பேச முடியாது செய்து விட்டது. ஒரு வேளை நான் நேரில் பல தடவை கண்டதாக நினைத்த பெண் இவளோ அன்றி வேறொருவளோ என்ற சந்தேகம் என் மனதில் புகுந்தது. எவ்வாறாயினும் அவள் கேட்ட முதல்வாக்கு த்தத்தை எளிதாக நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டேன். இரண்டாவது வாக்குறுதியின் பிரகாரம் நடக்க அசக்தனுயிருந்தேன். ஏனெனில் வேத சாஸ்திரிகள் பாவ மன்னிப்புப் பெற வருகிறவர்களிடம் அதிலும் முக்கியமாக பெண்பாலரிடம் கேள்விகள் கேட்காமலிருக்கக் கூடாது என்று கண்டிப்பான திட்டம் ஏற்படுத்தியிருந்தார்கள்.

மரியம்மாள் (Mary) அர்ச சில்ட் பிலோமின் (St. Philomene) மரியம்மாள் அலக்கோக (Mary Alacoque) ஆகியவர்களின் பேரால் அவளை திடப்படுத்தி தாராளமாக தன்பாவங்களைக்கூறி மன்னிப்புப்பெறும்படி உற்சாக மூட்டினேன். இரண்டாவது உறுதிமொழியைப்பற்றி கர்த்தரிடம் பிரார்த்தனை செய்து மறுவாரம் வந்தால் பதில் கூறுவதாகச் சொல்லியனுப்பி விட்டேன்.

அன்றே நான் குபேக் (quebec) நகரத்துப் பெரிய பாதிரியாயிருந்த ரெவரெண்ட் பெயிலார்ஜன் (Rev. Mr. Baillargeon) என்பவரிடம் சென்று ஆலோசித்ததோடு கனடா தேசத்து ஆர்ச் பிஷப் அவர்களிடமும் இதைப்பற்றி யோசித்தேன். அவர்களிடம், என்னிடம் வந்து தன் கஷ்டங்களைப்பற்றிக் கூறிய பெண்மணியைப்பற்றி விபரமாய்க்கூறியதோடு, வேதசாஸ்திரிகள் வற்புறுத்திக் கூறவேண்டுமென்று சொல்லும் கேள்விகளைக் கேட்பதில் எனக்குள்ள அருவெறுப்பையும் கூறி, பாவமன்னிப்புப் பெறுவதற்காக என்னிடம் வந்த பல வாலிபப் பாதிரிமார்கள், தாங்கள் அவ்விதக்கேள்விகளைக் கேட்பதால் பல தடவைகளில் பெண்களது கவர்ச்சிக்கு ஈடுபட்டுப் பாவச்செயல்கள் செய்ததாகக் கூறியுள்ள விபரத்தையும் தெளிவாகக்கூறினேன். மேல் கூறிய எனது வார்த்தைகளைக் கேட்ட அந்தப் பெரிய பாதியார் அதற்கு என்ன மறுமொழி புகல்வதெனத் தயங்கி விழித்தார். பிறகு தான் பல வேத சாஸ்திரங்களை வாசித்துத்தக்க விடை மறுநாள் கூறுவதாகச் சொன்னார். மறுநாள் சென்று அவர்கூறிய விடையை எழுதிவந்தேன். அது பின்வருமாறு:—

"பாவ சங்கீதம் செய்யுங்காலத்தில் பாதிரிகள் கேட்கும் வினைக்களுக்கு விடையளிப்பதால் பல தீங்குகள் நேருமென பிறர் கூறுவது இயற்கையே. ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அக்கேள்விகள் தக்க பயனளிப்பதாயிருப்பதால் அவைகள் அத்யாவசியமாகவே இருக்கின்றன. ஆண்கள் பாவமன்னிப்புப்பெறுவதற்காகச் சகல பாவங்களையும் தெளிவாகவே விளக்கி விடுகின்றார்கள். அவர்களில் அறிவில்லாத சிலர் மட்டும் தயங்குகின்றார்களாதலின் அவர்களிடம் சில கேள்விகள் கேட்கவேண்டியதிருக்கிறது. எங்களுடைய சொந்த அபிப்பிராயத்தின்படியும் அர்ச்சிஸ்ட் லெகோரி (St. Liguori) என்பவரின் கூற்றுப் படியும் பெண்கள் மாத்திரம் தங்களுடைய மடமையாலேற்பட்ட நாணத்தின் பயனுல் தங்கள் பாவங்களை வெளியிட்டுக்கூறப் பின்வாங்குகிறார்கள். எனவே அன்புள்ள பாதிரிகளாயிருப்பவர்கள் துரதிஷ்ட வசத்தினால் கீழான இரகசிய இச்சைகளுக்கு ஆட்பட்டு பாவிகளாயிருக்கும் பெண்களை மீட்பதற்கான நன்முயற்சிகள் பலவும் தேடவேண்டியவர்களாயிருக்கிறார்கள். வெகு ஜாக்கிரதையாக அதிக உற்சாகத்தோடு அவர்களுடைய உள்ளத்தில் புகுந்து முதலில் அவர்களது சிறுபாவங்களை வெளிப்படுத்தி பிறகு படிப்படியாய் அவர்களுக்கும் தோன்றாத விதத்தில் பல நுட்பமான கேள்விகளால் அவர்களது பெரிய பாவங்களையும் வெளிப்படுத்த முயற்சிக்கவேண்டும். நீர் கூறிய அந்தப் பெண் தன்னுடைய பாவங்களை வெளியிடுவதற்கு ஆதாரமாக மிக்க தந்திரமான சாதுரியமான கேள்விகளை கேட்க முடியாவிடில் நீர் அவர்களுக்கு எவ்வாறு பாவ மன்னிப்பு அளிக்க முடியும்."

"உம்மிடம் பாவமன்னிப்புப் பெற வந்த பாதிரிகள் கூறியதிலிருந்தும் இன்னும் ஏனைய ஆதாரங்களிலிருந்தும் நீர் அறிந்த மாதிரி நமது பாதிரிக்கூட்டம் உலக இச்சைகளுக்கு ஈடுபட்டு அழிதலுக்காக நீர் கவலைப்படவேண்டியதில்லை. நம்மிடத்திலும் அநேக இளம் கன்னிகைகளிடத்திலும் பெரிய பெண்களிடத்திலும் பாவமன்னிப்புப்பெற வேண்டியவர்களாயிருத்தலின் அவர்களின் பாவங்களை அடிக்கடி கேட்பதால் நம்முடைய மனம் சில சமயங்களில் கவர்ச்சியில் ஈடுபட்டு கீழ்தர வழிகளில் செல்லுமென்பது இயற்கையென்பதை நமது கர்த்தர் உணர்ந்தேயிருக்கின்றார். தவிர, பாதிரிகளுக்கு மன்னிப்புப்பெறுவதற்காகக் கர்த்தர் பரிசுத்த கன்னி, மரியாளை நமக்கு அருளியிருக்கிறார். அவ்வம்மையார் சதா நம்பொருட்டு பிரார்த்தனை செய்தவண்ணமாய் இருக்கின்றார்கள்.

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

பார்ப்பனர்களின் தேசியம்.

(சித்திரபுத்திரன்)

பார்ப்பனர்கள் என்ன நோக்கத்துடன் தேசியம் தேசியம் என்று கூப்பாடுபோடுகிறார்கள் என்பதைப் பற்றி பல தடவைகளில் நாம் வெளியிட்டிருக்கிறேன். தேசியம் என்ற சூழ்ச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டதற்கு காரணமே பார்ப்பனீயமான சனாதன தர்மங்களை பலப்படுத்தவே ஒழிய வேறில்லை. தேசியம் என்கின்ற வார்த்தைக்கு அநேகமாய் மக்கள் மனதில் இத்தேசத்திய பழைய நாகரீகம் சனாதன தர்மம் பழைய பழக்க வழக்கம் என்பவைகளையே பிரதானமாகக் கொள்ளும்படி பிரசாரம் செய்து வந்ததும் அதற்காக இந்தியபுராண இதிகாசங்களை ஆதாரமாக எடுத்துக் காட்டி பிரசாரம் செய்து வந்ததும் வாசகர்கள் அறிந்ததே. இந்தக்கருத்தைக்கொண்டேதான் கராச்சி காங்கிரஸ் சுயராஜ்ய திட்டம் ஏற்பாடு செய்திருக்கிறது. மற்றும் இந்திய நாட்டை "பாரதமாதா" (பூமிதேவி) என்று அழைப்பதும் "பாரததேசம்" என்று சொல்லுவதும் எல்லாம் இக்கருத்தை ஆதாரமாய்க்கொண்டதே ஒழிய வேறில்லை. தேசியம் என்பதற்கு அரசியலை சம்பந்தப்படுத்திய கருத்தும் இந்தியாவின் பழைய நாகரீகத்திற்கும் பழக்க வழக்கத்திற்கும், சனாதன தர்மத்திற்கும் ஏற்ற அரசியலை ஸ்தாபிக்கச்செய்த சூழ்ச்சியே தவிரவேறல்ல.

இன்றுகூட ஆங்கில ஆட்சியானது சனாதன தர்மப்படி—மனுதர்மப்படி ஆட்சி நடத்தப்படுவதாய் இருந்தால் இன்றைய தேசியமும் சட்டமறுப்பும், ஒத்துழையாமையும் எல்லாம் பறந்தோடிப்போகும்.

இந்தக் காரணத்தினாலேயேதான் தோழர் காந்தியும், மகாத்மாவாக்கப்பட்டார். ஆனால் இதுசமயம் காந்தியின் செல்வாக்கு வேறுவழியில் ஒரு அளவு குறைந்துபோன காரணத்தினால் அதை புதுப்பிக்கவும் காந்தியின் பிரயத்தினமோ, தயவோ சிறிதும் இல்லாமல் தீண்டாமை விலக்கும், ஆலயப்பிரவேசமும் கிளர்ச்சி பெற்றதன் காரணமாய் காந்தியார் இதில் பங்குபெற கருதி வலிய வந்து கலந்துகொள்ளவேண்டியேற்பட்டதாலும் "தேசியவாதி"களான பார்ப்பனர்களுக்கு இப்போது சிறிதுகஷ்டம் ஏற்பட்டுவிட்டது. சென்னை தேசிய பார்ப்பனர்கள் இருக்குமிடம் தெரியவில்லை. தோழர்களை சத்திய மூர்த்தி, ஏ. ரங்கசாமி அய்யங்கார், கே. பாஷ்யம மற்றும் எத்தனையோ சென்னை பார்ப்பனர்களுடைய பேச்சையும், மூச்சையும் காணோம். தோழர் சத்திய மூர்த்தியின் விலாசமே கண்டுபிடிப்பது கஷ்டமாய் இருக்கிறது. அவருடைய முழுசேவையும் தோழர் ராஜா சர். அண்ணாமலையின் குடும்பத்தாருக்கு கண்ராக்ட்டாய் (சோல் ஏஜன்ஸி) விட்டுவிட்டார் அவரைப் பற்றி கவிபாடவும் அவர் கோரும் பொது வாழ்வு காரியங்களை காங்கிரஸ் பிரதிநிதியாய் இருந்து நிறைவேற்றிக்கொடுக்க முன்னேறும் பிள்ளையாய் இருப்பதுமே அவருடைய சுயராஜ்ய தபசாயும், அவரது பிறப்புரிமையாயும் ஆகிவிட்டது. ஆனால் தோழர் ராஜா சர். அண்ணாமலை கொடுக்கும்பணங்கள் எல்லாம் சத்தியமூர்த்திக்கே சேர்ந்தது. தோழர் ஏ. ரங்கசாமி அய்யங்காரோ சங்கராச்சாரி கூட்டத்தினர்களை ஆதரித்து அவர்களை மேன்மைப்படுத்துவதன்மூலமும் மற்றும் சில பணக்காரர்களை விளம்பரப்படுத்துவதன் மூலமும் பெருமையும், பணமும் சம்பாதிப்பதே அவருடைய காங்கிரஸ் பிரசாரமாகவும், தேசிய பிரசாரமாகவும் ஆகிவிட்டது. தோழர் கே. பாஷியம் அடுத்த சட்டசபை தேர்தல் வரை தலை நீட்டமாட்டார். குட்டி தேசிய வாதிகளான ஒரு கூட்டம் அதாவது, தோழர் எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் போன்றவர்கள் மேல் குறிப்பிட்ட தேசியவாதிகளின் உத்திரவுக்கு இணங்க காந்தியின் செல்வாக்கை குறைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கு உதாரணம் 7-3-33ந் தேதி "தமிழ் நாட்"டில் பிரசுரித்து இருக்கும் தோழர் எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் பிரசங்கத்தைப்படித்துப் பார்த்தால் தெரியவரும். இந்த அவசரத்தில் தோழர் ராஜகோபாலாச்சாரி, டாக்டர் ராஜன் கூட்டத்தை நான்மறந்துவிட்டதாக சிலர் சொல்லக்கூடும். ஒரு நாளும் மறக்கவில்லை. முன் கூறிய கூட்டமும் இந்தக் கூட்டமும் சகோதரர்களே ஆவார்கள் முன் கூறிய கூட்டம் வாதிக்கு வக்கீலாக இருந்து கொள்ளை அடித்தால் பின் கூறிய கூட்டம் பிரதிவாதிக்கு வக்கீலாய் இருந்து கொள்ளை அடிப்பவர்களாவார்கள். வரும்படியை சமமாக பங்கிட்டுக்கொள்ளுவார்கள்.

தோழர்கள் ராஜகோபாலாச்சாரியாரும், ராஜனும் எந்த அளவில் சீர்திருத்தக்காரர்கள் என்பதை கவனித்தால் யாவருக்கும் சுலபத்தில் உண்மை விளங்கிவிடும். ராஜகோபாலாச்சாரியும், ராஜனும் அவர்களது ஜாதி உயர்வுக்கு உரிய ஏதாவது ஒரு சின்னத்தை விட்டு இருக்கிறார்களா? என்பதைகவனித்துப்பாருங்கள்.

1. உச்சிக்குடுமை,

2. வடகலை, தென்கலை பிரிவுப் படி நாமம்.

3. பூணூல்,

4. பஞ்சகச்சம்,

5. சந்தியா வந்தனம்,

6. நன்மை தீமைகளில் பார்ப்பனர்க்குரிய சடங்குகள் முதலிய காரியங்களை எவ்வளவு ஜாக்கிரதையாய் அனுஷ்டிக்கிறார்கள் என்பதும் இவர்கள் பிரசங்கங்களில் பாரதம், ராமாயணம், நாலாயிரப்பிரபந்தம், முதலிய வைணவமத சாஸ்திர பிரசாரங்கள் எவ்வளவு நடைபெறுகின்றன என்பதும் கவனித்துப்பார்த்தால் சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார் கோஷ்டிப்பிரசாரத்துக்கு ராஜகோபாலாச்சாரி, ராஜன் கோஷ்டி பிரசாரம் எதாவது கடுகளவாவது இளைத்ததா என்பது விளங்கும்.

நம் தென்னாட்டில் இன்றைய பொது வாழ்வில் முன்னுக்கு வரவேண்டும் என்கின்ற ஒருவனுக்கோ அல்லது விளம்பரம் பெறவேண்டும் என்கின்ற ஒருவனுக்கோ அல்லது அதிகாரம், பதவி, சட்டசபை, ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கத்தினர் முதலியவை பெறவேண்டும் என்பவர்களுக்கோ அவர்கள் பார்ப்பனராயிருந்தாலும், முஸ்லீம்களாய் இருந்தாலும் கிறிஸ்தவர்களாய் இருந்தாலும் பார்ப்பனரல்லாதார்களாய் இருந்தாலும், ராஜா சர்களாய் இருந்தாலும், ஜமீன்தார்களாய் இருந்தாலும், பெரும்பணம் பூமிபடைத்த செல்வவான்களாய் இருந்தாலும், இந்த இரண்டு கூட்டத்தில் எதாவதொரு கூட்டத்திற்கு அடிமையானாலொழிய அல்லது வாய்பூசினாலொழிய வேறு மார்க்கமில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட இவர்கள் சங்கதியே இப்படியானால் மற்றபடி வயிற்றுச்சோத்துக்கு வேறுவழியில்லாமல் எப்படி நடந்தாவது வயிறு வளர்க்கலாம் என்ற சில தேசபக்தர்களைப்பற்றி நான் சொல்ல வேண்டுமா? என்று கேள்கின்றேன். ஆகவே இன்றைய நிலைமையைப் பார்த்தால் பார்ப்பனர்களின் தேசியம் ஓரளவுக்கு வெற்றிபெற்று வருகின்றது என்று தான் சொல்லவேண்டும். காரணம் என்னவென்றால் பார்ப்பனரல்லாத மக்களுக்குள் தலைவர்கள் என்பவர்கள் முதல் காவலர்கள் என்கின்ற வரை சுயமரியாதையில் போதிய கவலை இல்லாமல் எப்படியாவது அவரவர்கள் தனித்த முறையில் வாழ்ந்தால் போதும் என்கின்ற சுயநலத்தன்மையானது அவர்களை மறுபடியும் கீழ் நிலைக்கு கொண்டுவரும்படி செய்கின்றது. இதற்கு நான் என்ன செய்யமுடியும்? இந்தக் காரணங்களால்தான் பார்ப்பான் ஜாதியிலிருக்கும் பார்ப்பனரல்லாதவர்களில் உள்ள பணத்திலிருக்கும் மொத்தத்தால் உள்ள படிப்புத்திலிருக்கும், உத்தியோக அதிகாரத்திலிருக்கும் எல்லாம் ஒருங்கே அழியவேண்டும் என்று காரியாதை இயக்கம் சொல்லுகின்றது போல் தோன்றுகின்றது.

சேலம்.

சுயமரியாதைச் சங்கம்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்தில் டை சங்கப்பார்க்கில் 12-3-33 ஞாயிற்றுக்கிழமை மாலை சுயமரியாதைத் தோழர் ஜலகண்டாபுரம், எஸ். ராமநாதன் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அவ்வமயம் தோழர் குமணார் சதிரோசன் அவர்கள் "சமதர்மம்" என்பது பற்றியும், தோழர் எஸ். வி. கந்தசாமி அவர்கள் "வாலிபர் கடமை" என்பதுபற்றியும் பேசினார்கள். பின்னர் தலைவர் முடிவுரையில் மக்களை வைகுபணக்காரன் என்று அடிமைப் படுத்துவதற்கு ஆதாரமாயுள்ள, கடவுள், மதம், பார்ப்பனன், முதலாளி ஆகிய ஸ்தாபனங்கள் அடியோடு ஒழிந்தால் தான் நாட்டில் சமதர்மம் ஏற்படும். அவ்வாறு ஒழிக்கப் பாடுபடுகித வாலிபர்களுடைய கடமையாகும், என்று வெகு விரிவாக சொற்பொழிவு செய்தார். பின் வந்தனத்துடன் கூட்டம் இரவு 8-30 மணிக்கு கலைந்தது.

(நிருபர்)

சென்னை

சுயமரியாதைசங்கம்,

மூலக்கொத்தளம்.

11-3-33 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு டை சங்கசாலையின் ஆதரவில் தோழர் ஆர். என். எ. தாஸ் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் கூடியது.

சிறுபாலர்களால் சுயமரியாதை கீதங்கள் பாடப்பட்ட பின்னர் தோழர்கள் ஜீ. ராஜ ரத்தினம் அவர்களும், 13 வயதுடைய மகிமைதாஸ் அவர்களும் "பெண்கல்வியின் அவசியம்" என்பதை பற்றியும் தோழர்வரதராஜுலு அவர்கள் "நம் கற்கவேண்டிய கல்வி எந்த விதமாக கற்கவேண்டும்" என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

பின்னர் தலைவர் முடிவுரையில் மூட நம்பிக்கை குருட்டுவழி ஹரிஜனங்கள் என்று வைத்த பெயரின் சூழ்ச்சி என்பவைகளைப்பற்றி சுமார் 1-30 மணிநேரம் பல உதாரணங்களுடன் சிறைந்த கரகோஷத்தினிடையே நீண்டதோர் சொற்பெருக்காற்றினார்.

காரியதரிசி வந்தனங்கூறி கூட்டம் சுமார் 6-15 மணிக்கு இனிது கலைந்தது.

சாஸ்திரத்திலிருப்பதைச் சொல்வதேயல்லாமல் காந்தியைக் குற்றம் சொல்வதல்ல.

"தீண்டாமைக்கு ஜாதியும், வர்ணமுமே அஸ்திவாரமென்பது தர்மசாஸ்திரம்.

(சித்தக்காடு K. ராமையா)

'ஹரிஜனம்' என்றபத்திரிகையின் ஆரம்பத்துக்கு டாக்டர் அம்பேத்கார் ஒரு வாழ்த்து செய்தி அனுப்பினர். அதில் டாக்டர் அம்பேத்கார் சொல்வதாவது:—

"தீண்டாமை என்பது ஜாதிவித்தியாச அமைப்பால் ஏற்பட்ட பயனேயாகும்.

ஜாதிகள் பல இருக்கும்வரை தீண்டாதார் என்பவரும் இருந்தேதீருவர்.

ஜாதி வர்ணாச்சிரமத்தை ஒழித்தாலொழிய தீண்டாதாரின் கதிமோட்சத்திற்கு வேறுவழியில்லை" என்பதேயாகும்.

இந்த அபிப்பிராயத்தை தோழர் காந்தி மறுத்து பத்திரிக்கைகளுக்கு ஓர் அறிக்கையை விடுத்திருக்கிறார். அவ்வறிக்கை 11-2-33 தமிழ்தினசரி பத்திரிக்கைகளில் காணப்படுகிறது. அதில் வர்ணாச்சிரமதர்மமும், ஜாதிமுறையும் தீண்டாமை, அண்டாமைக் கொடுமைகளுக்கு அஸ்திவாரமல்ல என்பதாகவும், தீண்டாமைக்கொடுமை ஒழிந்து விட்டால் வர்ணதர்மமும் ஜாதி அமைப்புகளும் புனிதப்பட்டுவிடுமென்பதாகவும் சொல்லுகிறார். இன்னும் சொல்லுகிறார். வர்ணதர்மம் ஜாதி அமைப்பு இவைகளின் முழு அமைப்பு நசிந்துப்போகாமல் தீண்டாமையிலக்கு வேலையை செய்யவேண்டுமாம்! உண்மையான வர்ணாச்சிரமத்தையும், ஜாதிமுறையையும்நிலைநிறுத்தியே, தீண்டாமை ஒழிப்புவேலையை தோழர். காந்தி அவர்கள் இந்துமதத்தின் சார்பாக எடுத்துக்கொண்டிருக்கிறார்.

தோழர் காந்தியின் சித்தாந்தப்படியே வர்ணத்தையும், ஜாதியையும் அப்படியே வைத்துக்கொண்டு தீண்டாமையை ஒழிக்க முடியுமா? என்பதையோசிக்க வேண்டியதேயாகும். இந்தியாவுக்கே ஒருகுறிப்பிட்ட மனிதராகவிளங்கும் காந்தியின் பிரஸ்தாப அபிப்பிராயத்தை முன்பின் யோசியாமல் காந்தியின் வாக்கே கடவுள் வாக்கு என்ற முடிவோடு பின்பற்றிவருகிற தேசியவாதிகளும் இதை நன்கு பரிசீலனை செய்ய வேண்டியதைத்தவிர 'மகாத்மா'' என்பதற்கு மௌனம் சாதிக்கவும் முடியாது. 'மகாத்மாக்கள்' பெரியவர்கள் அவதாரபுருஷர்கள் போன்றவர்களின் அபிப்பிராயங்களை பகுத்தறிவால்பரிசீலனை செய்யாமல் அப்படியே பின்பற்றிய சுபாவமே! நம்நாடு இந்நிலைக்கு பாத்திரப்பட்டதென்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். வர்ணாச்சிரமக்கொடுமையாலும், ஜாதிக்கொடுமையாலுமே நம்நாடு எல்லா துறையிலும் சீர்குலைந்து சின்னபின்னப்பட்டிருப்பதாக பலர் சொல்லி கேட்டிருக்கிறோம். அதுஒருவாறு இருக்கட்டும் வர்ணாச்சிரமதர்மம், ஜாதிமுறை என்ற கோட்பாடுகளைப் பொறுத்து தோழர் காந்திக்கு ஏற்பட்டிருக்கிற அபிப்பிராயம் இப்போதேற்பட்டதா? அல்லது தோழர் காந்தியின் பொதுவாழ்வு என்று ஆரம்பமாயிற்றோ அன்றேவர்ணமும், ஜாதிகளும், உடன் வந்ததென்பது உலகமறிந்ததே! ஆகவே காந்திஅவர்களோடு உடன்பிறந்த வர்ணதர்மத்தையும், ஜாதிமுறையையும்,அவர் விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டிருந்தாலும்அவைகள் நாட்டு மக்களுக்குபலன்தரத்தக்கதாஎன்பதை கொஞ்சம் சிந்தியுங்கள். வர்ணதர்மமும் ஜாதிமுறையும் டாக்டர் அம்பேத்கார் சொல்கிறபடி அடியோடு ஒழியாமல் தீண்டாமை ஒழியுமா என்பதாக அம்பேத்கார் சொல்வதையும் எடுத்துக்கொள்ளவேண்டாம். சுயமரியாதைக்காரன் சொல்வதற்காகவும் கேட்க வேண்டாம். காந்தியைவிட தோழர். பி. வரதராஜுலு மிகதாழ்ந்தவராகவும் படம் போடவேண்டாம். ஆனல் காந்தியார் சொல்லும் வர்ணாச்சிரமத்தையும், புராதின வர்ணாச்சிரமத்தையும் எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்யுங்கள். இவ்விரண்டையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் வர்ணாச்சிரமத்தாலும், ஜாதிபாகுபாட்டிலும் தீண்டாமைக்கொடுமை ஏற்பட்டதா அல்லது வர்ணத்திலும் ஜாதியிலும் தீண்டாமை என்பது இடைக்காலத்தில் புகுதப்பட்ட அழுக்கா என்பது புலப்பட்டுவிடும். காந்தி'மகாத்மா' பெரியவர் என்பதற்கும்மதிப்பு கொடுக்கவேண்டியதில்லை.தோழர்கள் அம்பேத்கார் பி.வரதராஜுலு போன்றவர்கள் சிறியவர்கள் என்று கேவலப்படுத்தவும் வேண்டியவேலையுமில்லை. ஆதிவர்ணாச்சிரமத்தின் அதிகாரமென்ன என்பதை கொஞ்சம் பரிசீலனை செய்து விட்டால் தீண்டாமைக்கும், வர்ண ஜாதிகோட்பாடுகளிடையில் தோழர். காந்தியார் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தின் பலாபலனையும், இதரர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தின் பலாபலன்களையும் ஸ்பஷ்டமாக உணர்ந்து கொள்ளலாம். ஆகவே அதைப்பற்றி கொஞ்சம்சொல்லுகிறேன். அடியில் சொல்லப்படுவது எனது சொந்த அபிப்பிராயமல்லவென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாம் சாஸ்திரத்தின் சார்பாகவே சொல்லப்படுவதேயாகும். அதாவது:—

"வருணாச்சிரம தர்மத்தை கற்பங்கள் தோறும் அமுல் நடத்துவதற்கு ஒவ்வொரு யுகங்களுக்கும் ஒவ்வொரு ஸ்மிருதிகளை புராதன கால ரிஷிகள் சிருஷ்டித்திருக்கிறார்கள். கிரேதாயுகத்துக்கு மனுஸ்மிருதியும், திரேதாயுகத்துக்கு கௌதம ஸ்மிருதியும், துவாபரயுகத்துக்கு சங்க ஸ்மிருதியும், கலியுகத்துக்கு பராசர ஸ்மிருதியுமாகும்."

இவைகள் வர்ணதர்மத்தின் சங்கல்பங்களே. ஒவ்வொரு வருணத்தாரும் வழுவாமல் நடந்துகொள்ள வேண்டுமென்பதை கட்டளையிட்டு அதிகாரம் செலுத்துவதே ஸ்மிருதி பிரமாணங்களின் தாத்பர்யம். வர்ணாசிரமத்தையும், ஜாதி முறையும், காப்பாற்றுவதற்கென்று யுகவாரியாக ஏற்பட்ட ஸ்மிருதிகளில் கடந்த மூன்று யுகங்களின் ஸ்மிருதிகளை கலியுகத்தில் வாழும் நாம் எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. கலியுகத்துக்கு பிரமாணமான பராசர ஸ்மிருதியை எடுத்துக்கொண்டு பார்த்தாலே போதுமானதாகும். கடந்த மூன்று யுகத்தின் ஸ்மிருதி கட்டளையின் கொடுமைகளைவிட மிக குறைவாகக்காணப்படும் பராசரஸ்மிருதியை பரிசிலனை செய்தாலே வர்ண தர்மத்தின் கொடுமையும் ஜாதி முறையின் கேடும் இவைகளுடன் தீண்டாமைக்கு எவ்வளவு நெருங்கிய சம்பந்தமென்பதும் தெளிவாய் விளங்கும்.

முதலில் வர்ணாச்சிரமத்தின் கீழ் இருக்கும் முக்கிய பிரிவுகளான பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இவைகளை எடுத்துக்கொள்வோம். முதலில் இந்த நான்கு பிரிவினரும் தங்கள் தங்கள் தொழிலை ஆசாரப்படி நடத்திவைக்கவேண்டியதே ஸ்மிருதி கர்த்தர்களின் கண்டிப்பான கட்டளையாகும். அப்படி செய்யாதவர்களுக்கு மோக்ஷமில்லை. நரகம் சித்திக்கும் இதுதான் தர்ம சாஸ்திரம். ஆகவே வர்ணத்தார் ஜாதியார், சண்டாளர், முதலியவர்கள் செய்யவேண்டியதை ஸ்மிருதி ஆதாரத்தோடு கொஞ்சம் விவரிப்போம்.

பராசரஸ்மிருதி (1. 17)

"சதுர்ணாமபிவர்ணானா மாசாரோ தர் மபாலக: ஆசாரப்ரஷ்டதேஹானாம்பவேத்தர்ம: பராங்கமா:" என்ற வாக்கியப்படி நான்கு வர்ணங்களுக்கும் ஆசாரமே தர்மத்தை காப்பாற்றுகிறது, ஆசாரமில்லாததேகமுடையவனுக்கு தர்மம் பலப்படாது என்பதாம். ஒவ்வொரு வர்ணத்துக்கும் ஆசாரம் என்ன?

"ப்ராஹ்மணச்சேத்க்ருஷிம்குர்யாந்மஹாதோஷ மவாப்நுயாத்" அதாவது பிராமணன்தானே உழவு செய்து பயிரிட்டால் மகா தோஷத்தையடைவான். (ஷ ஸ்மிருதி 2. 7) "க்ஷத்திரியோபிக்ருஷிம்க்ருத்வாதேவாங்விப்ராம்ச்சபூஜயேத்" (ஷ ஸ்மிருதி 2. 13) என்றபடி க்ஷத்திரியன் பயிர் செய்துபிராமணர், தேவதை இவைகளை பூஜிக்கவேண்டியது. "யோநதத்யாத்தவிஜாதிப் யோராவிமூலமுபாகத: ஸசோரஸ்ஸச பாபிஷ்டோப்ரஹ்மக்நம்தம் விநிர்தியேத்" (ஷ 2. 11) அதாவது யாதாவொருவன் தானியராசியினருகிலுட்கார்ந்து பிராமணர்களுக்கு தானம் வழங்கவில்லையோ அவன் திருடன், அவனே பாவி, அவனே ப்ரம்மஹத்தி செய்தவனைச் சொல்லவேண்டும். அதேபோல் வைசியனும், சூத்திரனும் செய்யவேண்டும்.

சூத்திரவர்ணத்தானுக்கு பிராமணர்களுக்கு சுச்ரூஷையே பரமதர்மமாகவும் அப்படி செய்யாவிட்டால் ஆயுள் குறைந்து நரகத்தை அடைவதாகவும் ஷ ஸ்மிருதி (2. 14, 3. 14) ல் சொல்லப்பட்டிருக்கிறது. சூத்திரவர்ணத்துக்கு கல்வித்துறையிலும் உரிமை அளிக்க ஸ்மிருதி பிரமாணம் அனுமதிக்கவில்லை. "வேதாக்ஷரவி-சாரேண சூத்ரஸ்யநரகம் த்ருவம்" (ஷ ஸ்மிருதி 2. 16) அதாவது வேதாக்ஷரங்களை விசாரிப்பதாலும் சூத்திரனுக்கு நரகம் கிடைக்கும் என்பதாம். சூத்திரவர்ணத்தார் நல்ல உடையணியவும் உரிமையில்லை. பிராமணனுக்கு வெள்ளை வஸ்திரமும், க்ஷத்திரியனுக்கு சிவப்பு வஸ்திரமும், வைசியனுக்கு மஞ்சள் வஸ்திரமும், சூத்திரனுக்கு கருப்பு வஸ்திரமும், அணியலாம் என்று ஆசார காண்டத்தில் சொல்லப்படுகிறது. தீண்டாமை என்பது வர்ணாச்சிரமத்திலும், ஜாதிமுறையிலும், இடைக்காலத்தில் புகுத்தப்பட்டதாகவும் அக்கொடுமையை சீர்திருத்தக்காரர்கள் களைந்துவிட்டால் ஜாதிமுறையும் வர்ணகோட்பாடும் புனிதப்பட்டுவிடுமென்று'மகாத்மா' கருதுவதும் உண்மைக்கு விரோதமானதாகும். தீண்டாமை என்பதுவர்ணமுறையும், ஜாதியும் ஏற்பட்ட அன்றே தோற்றுவிக்கப்பட்டதே தவிர இடைக்காலத்தில் ஏற்பட்டதல்ல. பொதுக்கிணறு, ஜாதி இந்துக்கள் வசிக்குமிடம் வீடு முதலிய இடங்களுக்கு தீண்டாதாரை இக்காலத்தியவர் அனுமதிக்காமல் தடுப்பதற்கு முக்கியமான காரணம், பழையவர்ணாச்சிரம ஜாதி உணர்ச்சியே அல்லாது வேறல்ல. வர்ணாச்சிரமம் தாண்டவமாடிய கடந்த யுகங்களிலும் சண்டாளர்களுக்கு மனித சமூகத்தின் நியாயமான உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக:—

"அவிஜ்ஞாதஸ்து சண்டாளோ

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

திருவாரூரில் ஈ. வெ. இராமசாமி.

திருவாரூர் வாசியான தோழர் என். ராமன் அவர்கள் (சென்னை ராணிஅண்கோ பொக்கிஷதார்) உத்தியோகத்திலிருந்தபடியே திருக்கழுக்குன்றத்தில் தனது திருமணத்தை புரிந்து கொண்டதால் அவர்சம்சாரம் தோழர் கனகாம்புஜம் உள்பட திருவாரூருக்கு அழைக்க வேணுமென்று, உள்ளூர்வாசிகளும், முனிசிபல் கௌன்சிலர்களும், சுயமரியாதை இயக்கத்தினர், சமதர்மவாசகசாலே, வைக்கம் வீரர்வாசகசாலே, பொட்டறுப்புசங்கம் முதலிய பொது ஸ்தாபகர்களின் அவர்மேலீட்டால் தோழர் என். ராமன் தம்பதிகளை 12-3-33ல் அழைப்பதென்று முடிவுசெய்து எல்லோருக்கும் முன்கூட்டி அழைப்பித்து இருந்தார்கள். தோழர் என். ராமன் அவர்கள் பிரபல சுயமரியாதைக்காரராதலும், திருவாரூரில் வாலிபர்களிடையே சுயமரியாதை இயக்கம் இன்று இயங்கிக்கொண்டிருப்பதற்கு ஆதிகாரணஸ்தர்களில் தோழர் என். ராமன் ஒருவராதலாலும், அவருடைய அழைப்புக்குபெருஞ்சந்தோஷத்துக்கறிகுறியாக இயக்கஸ்தாபகர்தோழர். ஈ. வெ. ராமசாமி அவர்களையும், புதுக்கோட்டை தோழர் முத்துசாமிவல்லத்தரசு, பொன்னம்பலனுர், அழகர்சாமி, தக்கோலம் செல்லப்பா முதலியசுயமரியாதைத் தோழர்களுக்கும் அழைப்பு அனுப்பியிருந்தது. குறிப்பிடத்தக்கது குறிப்பிட்டபடி 12-3-33 ஞாயிற்றுக்கிழமை காலே திருவாரூர்புகைரதநிலேயமடைந்து வல்லத்தரசு உள்பட என். ராமன் தம்பதிகளும், அவர்மைத்துனர் தோழர் ராஜகோபால் அவர்களும், அழகர்சாமி, பொன்னம்பலம், முதலியவர்களை சென்னையிலிருந்தும், தோழர் ஈ. வெ. ராமசாமி, நாகை மணி இருவருப் ஈரோட்டிலிருந்தும்விஜயம் செய்தார்கள். நகரமக்கள் பெரும்பாலோர் யாவருக்கும் மலர் மாலேசூட்டி வரவேற்றார்கள். எல்லோரையும் வீதிவலமாக அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்திருந்தும் "மழையாய் இருந்ததால் முடியாமல் போய்விட்டது"

எல்லாரையும் தெற்கு வீதிமுனிசிபல்பாடசாலேக்கு அழைத்துச்செல்லப்பட்டது. மத்தியானம் இடைவேளைவிருந்துகள் தம்பதிகள் உள்ளிட்டஎல்லாதலேவர்களுக்கும்சிறப்பாகவிருந்து நடந்தது. சுமார் 300பேருக்கு அதிகமாக விருந்தில்கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. மாலே 6மணிக்கு தெற்குவீதி இசைவேளாளமடத்துக்கெதிரில் பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தும், மழைவருமென்ற சந்தேகத்தால் கருணாநிதி தியேட்டருக்கு திடீரென்று கூட்டத்தை மாற்றப்பட்டது. மாலே5-30மணிக்கு தம்பதிகள் உள்பட தலேவர்களை வாதியங்களுடன் மோட்டார் வாகனத்தில் ஊர்வலமாக கருணாநிதி தியேட்டருக்கு அழைத்துச்செல்லப்பட்டது. கூட்டத்துக்கு 750பேருக்குஅதிகமாகவே விஜயம் செய்திருந்தார்கள். சுயமரியாதை இயக்கத்துக்கு ஆயிரக்கணக்காய் கூடும் திருவாரூரில் மழையாலும், குறிப்பிட்ட இடத்தை திடீரென்று மாற்றியதாலும் எதிர்பார்த்த கூட்டமில்லாமல் போய்விட்டது. பல பெண்களும், அதிகாரிகளும், முஸ்லீம்களில் 100 பேர்வரையும் விஜயம் செய்திருந்தார்கள். விஜயம்செய்திருந்தவர்களில் தோழர்கள் டி கே. ராமசாமி அவர்கள் பி. ஏ. பி. எல். சிவசுப்பிரமண்யம் பி. ஏ. பி. எல். ராமதாஸ் பி. ஏ. பி. எல். மேப்பலம் சோமசுந்திரம் அவர்கள் ஜில்லா போர்டுமெம்பர். பாலசுப்பிரமண்யம்பி.ஏ.டி.வி.கோவிந்தராஜுலு பி. ஏ. எல். டி. திருவேங்கிடம் பி. ஏ. எல். டி. மளிகை தெக்ஷிணமூர்த்தி, மளிகை துரைசாமி செட்டியார் (முனிசுபல் கௌன்சிலர்) நடேசம்பிள்ளை முனிசிபல்கௌன்சிலர்முத்தையா வன்னியர்முனிசிபல் கௌன்சிலர் ஆறுமுகநாடார் (முனிசிபல் கௌன்சிலர்) சர்க்கில்இன்ஸ்பெக்டர் அவர்சம்சாரம், தியாகராஜஞானியார் கே. எஸ். என். ராஜன், வி. ரெங்கராஜன், சிற்சபேசன், கேசவலு, லக்ஷப்பா, கே. சுந்திரராஜ், முத்துசாமி, வாஞ்சிலிங்கம், முத்துக்குமாரன், ராஜசந்தனம் பேங்குமெம்பர், சதாசிவம், பேங்குமெம்பர், டி. என். சௌரிராஜபிள்ளை, டி. என். சின்னத்தம்பி, எஸ். வீதிவடங்கம்பிள்ளை, எஸ். பக்கிரிசாமி, எஸ். சுந்தரிசன், வி. பராசக்தி, வி. நடேசன், என். நடேசன், காளிதாசன், முத்தப்பா, எஸ். கண்ணப்பா, சி. பாலு, நாயிடு, பி. கிருஷ்ணசாமி, சங்கர், சிங்கம், கோவிந்தசாமி, வி. ரெத்தினம், வி. தியாகராஜன், பரமசிவம், பொன்னையா, டி. எஸ் ராமலிங்கம், ராமமிர்தம், மாணிக்கம், ராஜூ மருதப்பன், மாரியப்பன், ஆர். ரெத்தினசபாபதி, ஆர். தியாகராஜன், எஸ். வேணுகோபால், வேணு, குப்புசாமி, பழனிவேல், சி. நடராஜன், ரெத்தினம் கார்குடி. ஆர். எஸ். ரெத்தினம், எஸ். சம்பந்தம், டி. சின்னையா, கெ. கோவிந்தராஜ், (மாயவரம்) நாகை சுயமரியாதைசங்க அங்கத்தினர்கள், மரதம்பட்டணம் வள்ளுவ வாலிபசங்க அங்கத்தினர்கள், ருத்திராபதி, தஞ்சை ஏகாம்பரம் (ரிட்டேயட், சப்மேஜிஸ்ட்டிரேட்) தஞ்சை சொக்கு முதலியார் கொத்தங்குடி முதலியவர்கள் ஆவார்கள்.

கூட்டத்துக்கு பிரபல வக்கீல் தோழர் சி. சிவசுப்பிரமண்யம் அவர்கள் பி. ஏ. பி. எல். முன்சிபல் கௌன்சிலர் அண்டு ஜில்லாபோர்டு மெம்பர் அக்கிராசனம் வகித்தார். தோழர்கள் பொன்னம்பலனுர், ஈ. வெ. ராமசாமி, முத்துச்சாமி வல்லத்தரசு, கெ. வி. அழகர்சாமி முதலியவர்கள் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி பேசினர்கள். இறுதியாக தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு இளைஞர் கழகத்தார் சார்ப்பாகவும், சி. சிவ சுப்சுரமண்யம் அவர்களுக்கு சமதர்ம வாசகசாலே சார்பாகவும், என், ராமன் தம்பதிகளுக்கு வைக்கம் வீரர் வாசகசாலே சார்ப்பாகவும், பத்திரம் வாசித்துக்கொடுப்பட்டதும், தோழர்என். ராமனுக்கு வாசித்துக் கொடுத்த வரவேற்புப்பத்திரத்தை ஒரு வெள்ளிப் பேழையில் அடக்கம் செய்து கொடுத்தார்கள். தோழர் என். ராமன் தனக்கு செய்த உபசாரத்துக்கும், வரவேற்புக்கும் சம்சாரத்தின் சார்பாகவும், தன்சார்ப்பாகவும் வந்தனம் சொன்னுர். தலேவர் முடிவுரைக்குப் பிறகு தோழர் ராஜசந்தானம் அவர்களால் வந்தனம் சொல்லப்பட்டு, இரவு 9-30 மணிக்கு கூட்டம் கலேந்தது.

பிறகு தோழர் ஈ. வெ. ராமசாமியும், எம் வல்லத்தரசும், கெ. வி. அழகிரிசாமியும் திருவாரூர் 4வது செங்குந்தர் மகாநாட்டுக்கு விஜயம் செய்தார்கள் அங்கு தலேவர்களால் வரவேற்கப்பட்டார்கள்.

மாயவரம்.

மறுநாள் காலேயில் தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, அ. பொன்னம்பலம், நாகை மணி சி. நடராஜன் முதலியவர்கள் மாயவரம் சென்று அங்கு மாகாண மகாநாடு விஷயமாய் சில ஆலோசனைகள் செய்த பிறகு 4மணிவண்டியில்தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, அ. பொன்னம்பலம் இருவரும்ஈரோடிற்குப் பிரயாணமானுர்கள்.

தஞ்சை ஜில்லா மூன்ருவது சுயமரியாதை மகாநாடு நாகபட்டணம்.

தலேவர் தோழர் K. முத்துசாமிவல்லத்தரசு B. A., B. L., M. L. C.,

ஆரம்பவிழா ஆற்றுபவர் தோழர் நீலாவதி ராமசுப்பிரமணியம்.

வரவேற்புக்கழகத்தலேவர் தோழர் A. சிவராமசாமி,

பொதுக்காரியதரிசி தோழர் T. P. ஆறுமுகம்'

கூட்டுக்காரியதரிசிகள் தோழர்கள் R. V. கோபால், K. முருகேசன்

பொக்கிஷதார் தோழர் M. S. ராஜகோபால்,

தொண்டர் படைத்தலேவர் தோழர் M. R. பதி

8, 9-4-33 சனி, ஞாயிறுகளில் நாகை கோர்ட்டுக்கு எதிரில் அமைக்கும் 'சமதர்மபந்தலில்' நடைபெறும் அதுசமயம் தோழர்கள் ஈ. வி. ராமசாமி, நாகம்மாள், எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல், எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல், எஸ். குஞ்சிதம், பி. ஏ. எல். டி, குருசாமி பி.ஏ, கண்ணம்மாள், சி. நடராஜன், கே ராமையா, அ. ராகவன், அ. பொன்னம்பலம், கே. வி. அழகர்சாமி எஸ். வி. லிங்கம். என். பி. காளியப்பன், ப. ஜீவானந்தம், ராமசுப்பிரமண்யம், நீலாவதி, விசாலாக்ஷி, அன்னபூரணி, ரெத்தினசபாபதி, சிவசாமி சிதம்பரனுர், இந்திராணி பாலசுப்பிரமண்யம், இன்னும் இயக்க பிரபல தோழர்கள் பலர் விஜயம் செய்வார்கள். வெளிஜில்லாக்களிலிருந்து ஏராளமான பிரதிநிதிகளை எதிர் பார்க்கப்படுகிறது. மகாநாட்டிற்கு தீர்மானங்கள் அனுப்புவோர் ஏப்ரல் மாதம் முதல் தேதிக்குள் மகாநாட்டு காரியதரிசிக்கு அனுப்பவும்.

பெண்களுக்கு எவ்வித கட்டணமும் இல்லே.

வரவேற்பு கட்டணம் ரூ. 3—0—0

பிரதிநிதி கட்டணம் ரூ. 1—0—0

விசிட்டர் கட்டணம் ரூ. 0—4—0

வரவேற்பு கழகத்தார்களுக்கும், பிரதி நிதிகளுக்கும் சாப்பாட்டு சௌகரியத்தை முன்னிட்டு டிக்கட்டுகளுடன் சாப்பாட்டு டிக்கட்டும் தனியாகக் கொடுக்கப்படும்.

விளம்பர அதிகாரிகள்,
ஏ. கோவிந்தன்,
என். சிவஞானம்.

பல டீபார்ட்டிகள்.

பெரிய அக்கிராரம் சேர்மென் தோழர் ச. யி. ஜி. முகமது இப்ராஹீம் சாயபு அவர்கள் பெரிய அக்ராரம் யூனியன் சேர்மனுக இரண்டாம் தடவை தெரிந்தெடுக்கப்பட்டதற்காக பல டீபார்ட்டிகளும், விருந்துகளும் நடந்தன. அவற்றில் பிரபலமானது 25-2-33-ந்தேதி பெரியக்கிராரத்தில் நடந்த டீபார்ட்டியாகும். அதில் ஈரோட்டிலிருந்து பிரபல வியாபாரிகளும், சுற்றுப்பக்கத்திய விவசாயிகளும் வந்திருந்தார்கள். சதுர், பாட்டுக்கச்சேரி முதலியவைகள் நடந்தன. போட்டோபடம் எடுக்கப்பட்டன.

சென்ற வாரத்தில் ஈரோட்டில் சேர்மென் கான்சாயபு கே. ஏ. ஷேக்தாவுத்பகதூர் அவர்களால் ஒரு பலமான விருந்து நடத்தினுர். பலர் சேர்மெனை புகழ்ந்துபேசினுர்கள். இரவு முழுதும் வேடிக்கை நடந்தன. சேர்மென் தோழர் ச. யி. ஜி. மு. அவர்கள் தகுந்தபடி பதில் சொல்ல ஆசை இருப்பதாய் தெரிவித்துக் கொண்டார்.

(ஒரு நிருபர்)

திருவாரூர் கள்ளர்குல இளைஞர் மன்றத்தில் முத்துசாமிவல்லத்தரசுக்கு உபசாரப்பத்திரம்.

வல்லத்தரசுபதில்.

13-3-33ந் தேதியில் புதுக்கோட்டை தோழர் முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். அவர்களுக்கு திருவாரூர் கள்ளர் குல இளைஞர் கழகத்தார் சார்பாக பச்சயப்பன் சத்திரத்தில் ஒரு பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அவ்வைபவத்திற்குசுமார் 200 பேர்களை விஜயம் செய்திருந்தார்கள். தோழர்களான நகரசபை தலைவர் பாவா சி. கோபாலசாமி முதலியார், ஸ்ரீ வர்த்தமான முதலியார் முனிசிபல் கௌன்சிலர், ராமதாஸ் பி. ஏ. பி. எல்., சர்க்கில் இன்ஸ்பெக்டர் தியாகராஜஞானியார், சி. சிவசுப்பிரமணியம், என். எக்ஸ். வெங்கட்டராம அய்யர் பி. ஏ. பி. எல்., திருவேங்கிடம் பி. ஏ. எல். டி. டி., வி. கோவிந்தராஜலு பி. ஏ. எல். டி., கோதண்டபாணி கைத்தொழில் வாத்தியார். பாலசுப்பிரமணியம் பி. ஏ., எ. குப்பையா, எ. துரைசாமி ஹெட்கிளார்க்கு, சப்கோர்ட்டு, உள்ளூர் பொதுஸ்தாபன அங்கத்தினர்கள், கல்வத்தெருவார்கள் உள்பட அனேகர் விஜயம் செய்திருந்தார்கள். கூட்டத்துக்கு தோழர் சி சிவ சுப்பிரமணியம் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரைக்குப் பிறகு வல்லத்தரசுக்கு வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது.

பத்திரத்துக்கு பதில் சொல்லும் முகத்தான் தலைவரவர்களே! உறவினர்களே! சகோதரர்களே! என்னை இவ்விடம் வரவழைத்து நமது குல வாலிபச் சங்கத்தாரால் அளித்த வரவேற்பு பத்திரத்திற்கு வந்தனமளிக்கிறேன். நான் இங்கு வருவதற்கு சுயமரியாதைக்காரனென்ற முறையில் அறிமுகப்பட்டேனாயினும், அக்கொள்கைக்கு புறம்பான பல பெரியவர்கள் இக்கூட்டத்தில் காணப்படும் என்னை சிறப்பித்து அழைத்து உபசரித்ததை பார்க்கும்பொழுது சுயமரியாதை இயக்கத்தின் உண்மையை காட்டுகிறது. சுயமரியாதை இயக்கம் கடவுள், மதம் இல்லையென்று சொல்வதினால் சிலர் பயப்படுகிறார்கள். அந்தபயம் நமது குலத்தவர்களுக்கு வேண்டுவதில்லை. கடவுள் மதம் இல்லையென்று சுயமரியாதை இயக்கம் எந்த அடிப்படையான கொள்கையோடு செல்கிறதென்பதை நீங்களே ஆராய்ந்து பார்த்தால், அதன் முடிவையும் உணர்ந்து விட்டால் நமது குலமாகிய கள்ளர் குலம் இன்று அடைதிருக்கும் பிற போக்கான நிலையை யடைய வேண்டியதில்லை. அது ஒரு புறமிருக்க நமது நாட்டில் ஜாதி பிரிவினைகள், சமயபூசல்கள், கட்சி பிரிவினைகள், மலிந்து கிடைக்கின்ற, இந்நிலையில் ஒவ்வொரு சமுகத்தாரும் தங்களுக்கென தனி ஸ்தாபனங்களை க்கண்டு முற்போக்கிற்காக உழைத்துக்கொண்டு வருகிற இக்காலையில் நமது நிலைமை என்ன? நமது குலமோ இந்நாட்டில் பூர்வீக புராதனகுலம், நாம் இந்தியாவின் வாரசாக இருக்கிறவர்கள். நமது மதம் இந்துமதம் என்று சொல்லப்படுவது பார்ப்பன சூழ்ச்சியேயன்றி வேறில்லை. சுமார் இரண்டாயிரத்தை நூறு வருடங்களுக்கு முன் இந்த பார்ப்பனர்கள் ஆடு,மாடு மேய்த்து வந்தார்கள். இவர்களுக்கு ஆகாரமோ ஆடு, மாடு, குதிரை முதலியவைகள், தங்கள் ஜீவனார்த்தமாக ஆசியாவின் வடமேற்கு பக்கத்திலிருந்து மிகவும் சுபீக்ஷட்டமான செழிப்பானபசு புற்றரைகாணும் நமது நாட்டிலுள்ள சிந்து நதிக்கரையில் குடியேறினர்கள். இங்கே பலவர்ணமானமீன்களை கண்டதும், அதையும் பிடித்து சாப்பிட ஆரம்பித்தார்கள். தங்கள் புத்திசாலித்தனத்தினுல் பூர்வீக குடிகளை அடக்கியாள மதம், கடவுள், முதலியவைகளை சிருஷ்டிசெய்தார்கள். நமது நாட்டிற்கும், ஆரியநாடு, பாரதநாடென்று பெயரும் இட்டார்கள். இப்படியாக நாட்டின் பல்வேறு பாகங்களிலும், குடியேறி பார்ப்பன மதத்தை பரம்பினார்கள். இந்த பார்ப்பனமதந்தான்; இன்று இந்து மதமாக இருக்கிறது.

பிறகு கி. பி. 9வது நூற்றாண்டில் கஜினி முகமது என்ற மன்னர் இந்தியாவின்மேல் படையெடுத்து ஒருகையில் குரானும், மற்றொரு கையில் வாளேந்தி இஸ்லாம்மதமாகிய தங்கள் மதத்தைபரப்பியதின் காரணமாக இன்று அவர்கள் எட்டுகோடி மக்களாக விளங்குகிறார்கள். நமது நாட்டில் சுமார் முன்னூறு வருடங்களுக்கு முன் வெள்ளையர்கள் நமது நாட்டிற்குள் பிரவேசித்து தங்கள். மதத்தைப்பரப்பி இதை ஆட்சியும் புரிகிறார்கள். இப்பொழுது நமது நாட்டில் முக்கியமாக ஆரியமதம், ஸ்லாம்மதம், கிறிஸ்துவமதம் முதலிய மூன்று முக்கியமதங்கள் காணப்படுவதன்றியில் ஜினை, புத்த, சைதன்ய மூன்று சிறியமதங்களும், காணப்படுகின்றன. அடிக்கடி மக்களுக்கு ஏற்பட்ட மதமாற்றத்தினுல், பூர்வீகதிராவிட நாகரீகம் அழிந்து ஒழிந்து போய்விட்டன.

நமது குலமாகிய கள்ளர் குல வரலாற்றைப்பற்றி திருச்சி திருவெங்கிசாமி நாடாரவர்கள் செந்தமிழில் ஓர் புத்தகம் வரைந்துள்ளார். அதன் வசனநடை மிகவும் கடினமாகவும் நமது மக்களுக்கு பிரயோஜனப் படும்முறையில்லை.

ஆனால் ரெய்கூடன் தோழர் குருமூர்த்தி அவர்கள் எழுதியுள்ள மற்றொரு புத்தகத்தில் கட்டுக்கதைகள் மலிந்ததாயும், ஆதாரமற்றதாயும் பொய்கூற்றுகள் நிறைந்ததாயும், நமது குலத்தை தேவேந்திர குலத்தின் ஒருபகுதியாக குறிப்பிட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. ஆதியில் சென்னையின் வசித்ததற்கு செங்கற்பட்டுக்கடுத்தார் போலுள்ள ஆலந்தூரில் சிலசிலாலேகனங்கள் கிடைத்திருக்கிறதென்றும் அக்காலத்தில் தெற்கேயுள்ள வேளாளர்கள் மிகவும் பணத்திமிர்கொண்டவர்களாகவும், அவர்களுக்குள் ஏற்பட்ட மனத்தாங்கல்களால் இருபிரிவுகளாகபிரிந்து நின்றனர். அவர்களுள் ஓர் பிரிவினர் இவர்களின் உதவியை நாடி அழைத்துக்கொண்டுவந்து தங்களது பகைவர்களை வென்றார்கள். தெற்கே வந்த நமது குலத்தார்கள் தங்கள் எஜமானர்களிடம் மிகவும் நன்றியாகவும், அடக்கமாகவும்நின்று ஊழியம்புரிந்து வந்தார்கள். பணத்திமிர்பிடித்தவேளார்கள், தங்களுடைய பணத்தின் கெட்ட ஆதிகத்தினுல், உண்டானமனபான்மையினுல், இவர்களை ஒடுக்க எண்ணி கூலிகளுக்கும் டையர்களாகநடத்த ஒரு பட்டத்தின் காரணமாக வந்த கலவரத்தினால் அவ்வேளாளர்களை யொடுக்கிராமநாதபுரம், மதுரை, தஞ்சை முதலிய இடங்களில் தங்களது ஆதிகத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். அவர்கள் தான் இன்று புதுக்கோட்டை சமஸ்தானாதிபதிகளாகவும்ஜமீன்தார்களாகவும், வாண்டையார்களைப் போன்ற பெரும் பணக்காரர்களாக இருக்கிறார்கள். நம்மால் விரட்டியடிக்கப்பட்ட வேளாளர்கள் தான் இன்று திருநெல்வேலியில் வசிக்கும் சைவர்கள். சோழ நாட்டையாண்ட சோழமன்னர்களும் நமது குல தோன்றல்களே! நமது குலத்தவர்களுக்கும், வேளாளர்களுக்கும் தொல்லை, கொடும்பகை ஆதிகாலத்தில் நடந்துவந்தது. அதன் காரணமாகத்தான் இன்றும் கள்ளன், மறவன், கனத்தஅகம்படியன் மெள்ள மெள்ள வெள்ளாளனுன்" என்ற பழமொழி விளங்குகிறது. (தொடரும்)

வேண்டுகோள்.

முந்திய வாரங்களில் நமது வேண்டுகோளின்படி தெரிவிக்கப்பட்ட சுயமரியாதைக்கிளைச்சங்கங்கள் 107. அதற்குப்பின் வந்த சங்கங்கள் பின்வருமாறு:—

108. திருவளர் சோலை, 109. பேட்டை (திருநெல்வேலி) 110. கணேசபுரம், 111. அரியமங்கலம், 112. குடிருலம், 113. இராமாநுஜம் புதூர், 114. அரந்தாங்கி, 115. பாண்டி, 116. புதூர்வாணியம்பாடி, 117. அருப்புகோட்டை.

மற்றுமுள்ள சங்கங்களையும், புதுப்பிக்கப்பட்ட சங்கங்களையும், நிர்வாக சபை அங்கத்தினர்கள் பெயர்களையும் சீக்கிரம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

தென்மாப்பட்டு தமிழர் சமரசசங்கம்.

12-3-33-தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8-30-மணிக்கு மலாய் நாட்டிலிருந்து வந்திருக்கும், கெ. என். சுப்பரமணியம், பி. பெரியசாமியும் இவர்களின் வரவேற்பை முன்னிட்டு தோழர் கெ. என். சுப்பரமணியம் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. முன் கூட்ட நடபடிக்கைகளைக் காரியதரிசியால் வாசிக்கப்பட்டது. தோழர் மாதவன் அவர்களும், கா. முத்தையா அவர்களும், தோழர் பி. பெரியசாமி அவகளும், எஸ். குருநாதன் அவர்களும் மிகத் தெளிவாகப் பேசினர்கள் பின் காரியதரிசியால் நன்றி கூறப்பட்டு இரவு 10-30க்கு கூட்டம் முடிந்ததென எஸ். குருநாதன் காரியதரிசி எழுதுகிறார்.

தோழர் ஈ. வெ. ராமசாமி.

தோழர் ஈ. வெ. ராமசாமி 18-3-33 சனிக்கிழமையன்று இரவு காரைக்குடி செல்லுகிறார். 19-3-33 ந்தேதியன்று ஞாயிற்றுக்கிழமை அவ்வூர் மகர் நோன்பு பொட்டலில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும் தோழர் ஈ. வெ. ராமசாமி "சமதர்மம்" என்பதுபற்றி பேசுவார்.

குடி அரசு எங்கும் துலங்குக! முடி அரசு எங்கும் வீழ்க!!

அனுப்பபாளையத்தில்
ஈ. வெ. இராமசாமியும், பொன்னம்பலமும்.

பாத்திர தொழிற்சங்க வரவேற்பு.

கோயமுத்தூர் ஜில்லா திருப்பூருக்கு அடுத்த அனுப்பபாளையம் என்னும் யூனியனில் சுமார் 1000 வீடுகள் உண்டு. அவை பெரிதும் பாத்திரங்கள் செய்யும் கைத்தொழிலாளிகளின் வீடுகளேயாகும். அங்கு சுமார் ஒரு வருஷத்திற்கு முன் பாத்திரத்தொழிலாளிகள் சங்கம் என்பதாக ஒரு சங்கம் ஏற்பாடு செய்து மிகவும் கட்டுப்பாடுகளுடன் நடந்து வருகின்றது. அதற்கு சுமார் 1000 மெம்பர்கள்வரை சேர்ந்து இருப்பதுடன் அனேகக்கட்டுப்பாடுகள் செய்யப்பட்டு அவரவர்கள் தனிப்பட்டு அவரவர்கள் வீட்டில் வேலை செய்யும் தொழிலாளிகளேயானாலும் தங்கள் வேலைக்கு இன்னஇன்ன கூலி என்றும், இவ்வளவு நேரந்தான் ஒவ்வொரு தொழிலாளியும் அவரவர் வீட்டில் வேலை செய்யவேண்டுமென்றும் இன்னஇன்ன நாள்களில்வேலைகள் செய்யக்கூடாது என்றும் அவர்களது முதலாளிகள் என்பவர்களிடம் இன்ன இன்ன மாதிரிதான் நடந்துகொள்ளவேண்டும் என்றும் பல நியமனங்கள் ஏற்பட்டு அந்தப் படியேகட்டுப்பாடாய் வேலைகள்நடந்தும் வருகின்றன.

இப்படிப்பட்ட தொழிலாளர்சங்கத்திற்கு சிலகிரந்தாவிதிகள் ஏற்படுத்தவேண்டுமென்று அதற்காகப்பொதுக்கூட்டமொன்று 11-3-33-ந்தேதி ஏற்பாடு செய்து அதை அனுசரித்து 15-ந்தேதியில் தோழர் ஈ. வெ. ராமசாமிக்குஒருவரவேற்பு அளிக்கவேண்டுமென்றும் அவரைக்கொண்டுமேல்கண்ட விதிகளின் பயன்களை பொதுஜனங்களுக்கு விளக்கி சில புத்திமதிகள் கூறச்செய்யவேண்டும் என்றும் ஏற்பாடு செய்து இருந்தார்கள். ஏனெனில் இந்தப்படிஒரு தொழிலாளர் சங்கம் அங்கு ஏற்படுத்தவேண்டும் என்பதைப்பற்றி சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன் தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, ஆர். கே. ஷண்முகம் எம். எல். ஏ., ஆகியவர்கள் அங்கு சென்று பிரசங்கங்கள் செய்துவிட்டு வந்ததை அனுசரித்து இச்சங்கம் ஏற்பாடு செய்யப் பட்டதால் இப்போது தோழர் ஈ. வெ. ராமசாமியை அழைத்திருந்தார்கள். அவ்வழைப்புக்கு இணங்கி ஈரோட்டிலிருந்து தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, அ. பொன்னம்பலம், மாரியப்பன் முதலியவர்கள் அனுப்பபாளையம் பாத்திரத்தொழிலாளிகள் சங்க தொண்டர்களின் தலைவரான தோழர் அப்புசாமி அவர்களால் ஈரோட்டிலிருந்து 5—3—33ந் தேதி காலையில் அழைத்துச் சென்று திருப்பூர் ஸ்டேஷனில் வரவேற்கப்பட்டு அனுப்பபாளையம் எல்லையிலிருந்து மேளவாத்தியங்களுடன் தொண்டர்கள் ஜே சப்தத்துடன் காரியதரிசி தோழர் அ. ராயப்பன் அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு மேல்படி தொழிலாளர் சங்கத்தலைவர் பலர் வந்து பேசிவிட்டுப் போனார்கள். பிறகு பகலில் காரியதரிசி தோழர் அ ராயப்பன் அவர்கள் வீட்டில் ஒரு விருந்து நடந்தது. மாலை 4 மணிக்கு பாத்திரத்தொழிலாளர் சங்க தொண்டர்கள் தோழர் ஈ. வெ. ராமசாமி, அ. பொன்னம்பலம், மாரியப்பா இவர்களுக்கு ஒரு பலமான டீபார்ட்டி நடத்தினார்கள். பிறகு மாலை 5-மணிக்கு மேளவாத்தியங்களுடன் தோழர் முருகநாதம் செட்டியார் முதலியவர்கள் வந்து மாரியம்மன் கோவிலுக்கு முன்னால் அலங்கரிக்கப்பட்டிருந்த மீட்டிங் இடத்துக்கும் அழைத்துச் சென்றார்கள். அங்கு சுமார் 1000 பேர்கள் கூடினார்கள். முதலில் தோழர் ராயப்பன் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி தோழர் முருகநாதன் செட்டியார் தலைமை வகித்து தோழர் ராமசாமியைப்பற்றி புகழ்ந்து பேசினார் பிறகு தலைவர் முருகநாதம் செட்டியார் அவர்களால் தோழர் ஈ. வெ. ராமசாமிக்கு அனுப்பபாளையம் பாத்திர தொழிலாளர் சங்க சார்பாக ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் அதற்கு இரண்டொரு வார்த்தைகளால் பதிலளித்து விட்டுஅமர்ந்தார். பிறகு தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் "வாலிபர் கடமை" என்பதுபற்றி சுமார் 1-மணி நேரம் பேசினார்.

பிறகு தோழர் ஈ. வெ. ராமசாமி 'தொழிலாளர் நிலைமை' என்பதுபற்றி 1-30 மணி நேரம் பேசினார். பிறகு தலைவர் முடிவுரை கூறி மற்றொரு தோழரால் தலைவருக்கும், உபன்யாசகருக்கும் வந்தனம் கூறி கூட்டம் இரவு 8-30 மணிக்கு முடிவுபெற்றது.

தோழர் பொன்னம்பலம் அன்று இரவு காரைக்குடிக்கு பிரயாணமானார். மறுநாள் காலையில் தோழர்கள் ஈ. வெ. ராமசாமி மாரியப்பன், ராயப்பன், அப்புசாமி முதலியவர்கள் ஈரோட்டிற்கு பிரயாணமானார்கள்.

சுயமரியாதைத் திருமணம்.

12—3—33 ந்தேதி குடி அரசு பத்திரிகையில் மணமகன் தேவை என்று குறிப்பிட்டிருந்த விளம்பரத்தில் கண்ட தோழர் திண்டுக்கல் தாலூகா சிலுவத்தூர் கிராமத்தில் இருக்கும் அகாமுத்து குமாரத்தி S. A. சின்னராமாயி அம்மாளுக்கும்,

திண்டுக்கல் தாலூகா வத்தலைதொப்பம்பட்டி கிராமம் கோவில்பட்டியிலிருக்கும் தோழர் இன்னாசிமுத்து குமாரர் P. I. பாக்கியநாதனுக்கும்.

22—3—33-ந்தேதி புதன்கிழமை மாலை 5-மணிக்கு ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சந்நிதியில் சுயமரியாதைத்திருமணம் நடைபெறும். தோழர்கள் விஜயம் செய்ய கோரப்படுகிறார்கள்.

சின்னராமாயி,
பாக்கியநாதன்,
மணமக்கள்.

தொழிலாளர்
தோழமைப்பயன்.

(பாரதிதாசன்.)

(ஆருக்குத்தான் தெரியும் அவர்மகிமை என்ற மெட்டு)

பல்லவி

ஏழைமை என்பதேது?—தொழில் மக்கள் பால்
தோழமை உணர்ச்சிதான் தோன்றிடும்போது (ஏ)

சரணம்.

வாழும் நினைப்புடைய மாந்தரின் கூட்டம்
வசிக்க இடமோ இந்த மண்ணில் எதேஷ்டம்
சூழும் திசை முழுதும் விளைபயிர் நோட்டம்
சோற்றுக்குப் போதுமிதில் ஏரிவாட்டம் (ஏ)

கையினை விரித்துத்தம் மெய்யினை மூடும்
கணக்கற்ற கோடி மக்கள் கவலையும் ஓடும்
செய்யும் உடையினைத்தும் யாரும் அன்போடும்
நித்தம் உடுத்திமிதம் வைத்தலும் கூடும். (ஏ)

காலுக்குச் செருப்புண்டு கனிவகைகள் கிடைக்கும்
கால் நடை மிக உண்டு பால் தயிர் கொடுக்கும்
மேலுக்கு மிருதுவா தாரம்வந் தடுக்கும்
வெம்மைநோய் அசுத்தங்கள் விரைந்தோட்ட மெடுக்கும் (ஏ)

எறும்பு முறியும்படி உழைப்பது திரும்
எந்திர உதவிகள் மிகுதியும் சாரும்
பொலிந்து புதுத்தொழில்கள் புலன்களிற் சேரும்
பொதுவில் நலமடைவார் புவியிலெல்லோரும் (ஏ)

கடவுளை, மதங்களைக் காப்பவர் என்போர்
கருணையிலாத நிலம் பொருள்வளிவாய்த்தோர்
உடைமை பறித்த இந்தக் கொடியரிற் கொடியோர்
ஒழிந்த பின்பே நலம் உறுவர் இவ்வுலகோர். (ஏ)

திண்டுக்கல்.

தோழர் எஸ். ஆர். சாமி அவர்களை திண்டுக்கல் ஏஜண்டாக நியமித்திருக்கிறோம்.

மானேஜர், குடி அரசு, ஈரோடு.

குடி அரசு.

ஈரோடு 1933 மார்ச்சு மீ 19-உ.

இராணுவம்.

—:0:—

இந்திய சட்டசபை வரவு செலவு திட்டத்தின் விவாதத்தின்போது ராணுவ சம்பந்தமாய்ப்பேசிய பல இந்திய பிரதிநிதிகள் என்னும் கனவான்கள் ராணுவத்தை இந்திய மயமாக்கவேண்டுமென்றும் இந்தியர்களையே ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென்றும் வாதம் செய்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு தேச மக்களையும் அடிமைகளாக்கி அத்தேச சரீர உழைப்பாளிகளினுடைய உழைப்பின் பயன்களையெல்லாம் சோம்பேரிகளும், சூட்சிக்காரர்களும் அனுபவித்துக் கொண்டிருப்பதற்கும், மனிதர்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியில்லாமல் மதம், கடவுள், அரசன் என்னும் பெயர்களால் வேதம், விதி சட்டம் என்பவைகளுக்கு அடிமைப்பட்டுக்கிடப்பதற்குக்காரணமாயிருப்பது இந்தராணுவ ஸ்தாபனமேயாகும். எப்படியெனில் கடவுள் கட்டளையால் ஏற்பட்ட வேதத்தின் கொள்கையை அனுசரித்துச் செய்யப்பட்ட சட்டத்தை நிர்வகித்து வரும் அரச ஆட்சிக்கு எதிராக ஏற்படும் கிளர்ச்சிகளையும், சாதனங்களையும் அடக்கி, ஒடுக்கி அழிக்கவே ராணுவம் என்பது வெகு காலமாக இருந்து வருகின்றது.

இந்த ராணுவத்திற்கு ஏற்படும் செலவுகள் அவ்வளவும் சரீரத்தால் பாடுபட்டுழைக்கும் மக்களின் உழைப்பின் பயனிலிருந்தே கொடுக்கப்படுகின்றன. (எப்படியெனில் ஒரு நாட்டிற்கு உழைப்பாளியான உழைப்பின் பயனை அல்லாமல் வேறு வழியில் செல்வமேயில்லை.)

ரா[illegible]ணுவச் செலவு மாத்திரமல்லா[illegible] ராணுவத்திற்காக சேர்க்க[illegible]ம மக்களும் உழைப்பாளி[illegible]டைய மக்களும், சகோதரர்[illegible]யாவார்கள்.

ஆகவே இதனால் ராணுவச் செலவும் உழைப்பாளிகளுடையது என்பதும், ராணுவ மக்களும் உழைப்பாளிகளின் சகோதரர்கள் என்பதும் தெளிவாய் விளங்குவதோடு எதற்காக இந்த ராணுவம் என்று யோசித்தால் மேற்கண்ட உழைப்பாளிகளாகிய தொழிலாள மக்கள் தாங்கள் உழைத்துப் பாடுபட்ட தொழிலின் பயனை அவ்வுழைப்பாளிகள் அடையமுடியாமல் அவர்கள் என்றென்றும் உழைப்பாளிகளாகவே இருந்து உழைத்துக் கொண்டே வருவதற்காக அவர்களை அடக்கி வைத்திருக்கும் காரியத்திற்கே பயன் படுத்துவதாகும் என்பதும் விளங்குகின்றது.

எப்படியென்றால் ராணுவம் என்கின்ற பெயரால் ஒரு கூட்ட மக்களை துப்பாக்கி, பீரங்கியுடன் வைத்திருக்காவிட்டால் உழைப்பாளியின் பயனை நோகாமல் அனுபவித்துக் கொண்டிருக்கும் சோம்பேரிக் கூட்டமும், பணக்கார முதலாளி கூட்டமும், இவ்விரண்டு கூட்டத்தாலும் ஏற்படுத்தப்பட்டு ஆதரித்துக்காப்பாற்றிவரும் அரசாங்கமும் அரை நிமிடநேரமும் உலகிலிருக்க இடமேயில்லை.

இதிலிருந்து ஒரு ராணுவ வீரன் என்பவன் எப்படிப் பட்டவன்? ஒரு தொழிலாளி என்பவன் யார்? என்று பார்த்தால் ஒரு தாய் வயிற்றில் பிறந்த இரண்டு சகோதரர்களில் ஒருவன் பாடுபடவும் மற்றொருவன் அப்பாட்டின் பயனை அப்பாட்டாளி அடையாமல் பாடுபடாத சோம்பேரி அடைய உதவியாளனாயிருக்கவுமான வேலைகளுக்கமருகிறவர்கள் என்பது விளங்கும்.

ஆகவே ஒரு பாட்டாளி—ஒரு தொழிலாளி அவனது உழைப்பின் பயனை அவனே அடையவேண்டுமானால் அவனது சகோதரனே ராணுவ வீரனாய் வந்துசுட்டுக் கொல்லும் கொடுமையை நிறுத்தினால் ஒழிய முடியவே முடியாது என்பதை உணர்ந்த எந்த உழைப்பாளியும் தன் சகோதரன் ராணு[illegible]ந சம்மதிக்கவேமாட்டான். அரசாங்கம் என்பதின் ரகசியமே இதில்தான் இருக்கின்றது.

எனவே இன்று ஒரு உழைப்பாளியின் உபயோகமானது உழைப்பாளியைப்பட்டினி போடுவது மாத்திரமல்லாமல் அவனையே சுடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் சமீபத்தில் இரண்டு வருஷ காலமாய் நடந்த உப்பு சத்தியாக்கிரகம்—சட்டமறுப்பு ஆகிய கிளர்ச்சிகளில் தடி-அடிபட்டவர்களும், தடியால் அடித்தவர்களும் யார் என்று பார்த்தோமானால் இருவரும் சகோதரர்களே ஆவார்கள். அனால் அடித்தவர்களுக்கு எஜமானன் அரசாங்கம் அடிபட்டவனுக்கு எஜமானன் முதலாளியும் சோம்பேரியான பார்ப்பானும் ஆவார்கள். இருவர் போட்டியின் பயனாய் இரு கூட்டத்திற்கும் ஆளுகளாய் இருசகோதரர்கள் அடிபட்டார்கள் என்பதுதான் உண்மையான முடிவு. இதுபோலவேதான் ஒரு தேசத்துக்கும், மற்றொரு தேசத்துக்கும் சண்டைவந்தால் இருதேச சகோதரர்களும் இரு தேச முதலாளிகளுக்காக, அரசர்களுக்காக ஒருவரை ஒருவர் சுட்டுக்கொன்று கொள்ளுகிறார்கள். இருசகோதரர்களுக்கும் போன்றத உண்டாகும்படி தேசாபிமானம் என்கின்ற கள்ளை ஊற்றுவதுடன் இருசகோதரர்களில் மற்றொரு சகோதரர்களாகிய உழைப்பாளிகளின் உழைப்பின் பயனாய் சேர்த்தபணத்தையே கூலியாகக்கொடுத்து கோயில்களில் நிரபராதியான ஆடுகளை கடவுள்பக்திக்காக பலிகொடுப்பதுபோல் யுத்தகளத்தில் தேச பக்திக்காக பலிகொடுத்துவிடுகிறார்கள். இத்தப்படி பலியான மக்களின் சகோதரர்களுக்கு ஏதாவது பயன் உண்டா என்று பார்த்தால் அவர்கள் மறுபடியும் பாடுபட்டு உழைத்து மறுபடியும் இப்போர்ப்பட்ட யுத்தம் ஏற்பட்டால் அதில் பலிகொடுப்பதற்காக சகோதரர்களையும், அவர்களுடைய செலவுக்கு பணங்களையும் கொடுத்துக்கொண்டு வருவதைத்தவிர வேறுவேலை கிடையாது. இந்தக் காரியமேதான் இன்றோ,நேற்றோ இருந்து மாத்திரமல்லாமல் ராமாயண பாரதகாலம் என்பதுதொட்டு அக்ரோணி,வள்ளம், மூலபெலம் என்பதாக கோடிக்கணக்கான மக்களை பலிகொடுத்ததாக சொல்லப்படுவதுமாகும். இதனால்தான் ராணுவத்திலிருப்பவர்களுக்கு வீரர்கள் எ[illegible] ராணுவத்தில் யுத்தத்தில் சாகின்றவர்களுக்கு வீரசொர்க்கம் கிடைக்குமென்றும் சொல்லி ஏமாற்றுவதுடன் அவர்களிடம் வேறு எவ்வித வேலையும் வாங்காமல் வளர்கிடாய்கள் போலவும் சும்மாவைத்து வளர்த்துவருவதுமாகும்.

இப்படிப்பட்டகாரியத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்தாபனத்தை அடியோடு ஒழிக்கவேண்டுமென்றுகருதாமல் அதை இந்தியமயமாக்கவேண்டும் என்கின்ற விஷயத்தில் வாதப்பிரதிவாதங்கள் நடந்ததும், தங்கள் தங்கள் வகுப்புக்கு இந்த உத்தியோகங்கள் கொடுக்கப்படவேண்டும் என்றுவாதங்கள் நடந்ததும் மிகவும் வருந்தத்தக்கதேயாகும். ஒரு சமயம் அந்த பதவியையும், பணத்தையும் இந்தியர்கள் அடைவது நன்மையல்லவா என்று சிலர் கேட்கலாம். இந்தக்காரியத்தில் இந்தியர்கள் என்பது இந்த நிலையில் சிறிதும் பொருந்தாது என்றே சொல்லுவோம். ஏனெனில் இதுசமயம் உலகத்திலுள்ள ராணுவவீரர்கள் என்பவர்கள் எல்லாம் தங்களுடைய உண்மையான நிலையை உணர்ந்து தேசம் என்றும், சட்டம் என்றும், நீதி எனறும், பாதுகாப்பு என்றும் சொல்லிக்கொண்டு தங்கள் சகோதரர்கள் உழைப்பிலேயே சாப்பிட்டுக்கொண்டு தங்கள் சகோதரர்களையே அடக்கி ஒடுக்கி சுட்டுக்கொண்டு வருகிறோம் என்பதை நன்றாய் உணர்ந்துகொண்டு வருகின்றார்கள். இந்திய ஜனங்களுக்குக்கடுகளவாவது இந்த உணர்ச்சிவரவேண்டுமானால் முதலில் அவர்களுக்குள் இருந்துவரும் ஜாதிப்பிரிவு உணர்ச்சியும், மதப்பிரிவு உணர்ச்சியும் மறைந்தாகவேண்டும். இவ்விரண்டு உணர்ச்சியும் மறைந்தாலொழிய அதிலும் குறிப்பாக ஜாதிப்பிரிவு உணர்ச்சி ஒழிந்தாலொழிய ஒரு சமூகம், அல்லது ஒரு மனிதன் ராணுவத்திற்கு லாயக்கில்லை என்றே சொல்லுவோம். ஏனென்றால் இந்திய வருணதருமப்படியும், ஜாதி தருமப்படியும் ஒவ்வொரு வருணத்துக்கும் ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொருலக்ஷியம் இருந்து வருகின்றது.

இப்படிப்பட்ட இவர்கள் ராணுவத்திற்கு போனால் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொள்ளுவார்களே ஒழிய எதிரிகளை சுடுவார்கள் என்று எதிர்பார்ப்பது மிகவும் அருமையான காரியமாகும்

இதற்கு ஒரு சிறு உதாரணம் கூறுவோம். அதாவது போலீசுக்கு ஆள்களைச்சேர்த்து பயிர்ச்சிகொடுத்துவரும் வேலூரில் உள்ள போலீசு சிப்பாய்களை அவர்களது மேல் அதிகாரியானவர் எல்லாபோலீஸ்காரர்களும் ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிடவேண்டும் என்று சொன்னதற்காக உடனே இரண்டு "மேல்ஜாதிக்கார" போலீஸ்காரர்கள் ராஜீனாமா செய்துவிட்டார்கள். என்

றும்இதைப்பற்றி சட்டசபையில் கேள்விகேட்டு அந்த அதிகாரி மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றும் சுதேசமித்திரன் என்னும் ஒரு "தேசியப்பத்திரிகை" 11-3-33ந்தேதி தனது நிருபர் பெயரால் ஒருநீண்ட வியாசம் எழுதி இருக்கின்றது.

இந்தக்காரியம் ஒன்று சுதேசமித்திரனின் தேசியத்திற்குவிரோதமானதாக இருந்திருக்கவேண்டும், அல்லது பொது ஜனங்களுக்கே இது ஒருவிரோதமான காரியமாய் இருந்திருக்கவேண்டும். எப்படி இருந்தாலும் ராணுவத்தை இந்த ஜனங்களைக்கொண்ட இந்திய மயமாக்கலாமா என்பதுதான் நமது கேள்வி. இதுசமயம் வேலூர்போலீசார் வெட்டிசாதம் சாப்பிட்டுக்கொண்டு சோம்பேரியாய்இருக்கின்ற சமயமானதால் இரண்டுபோலீசுக்காரர்கள்ராஜீனாமாக்கொடுத்துவிட்டதினால் ஒன்றும் முழுகிப்போய்விடவில்லை. தவிரவும் இந்த சமயம் பழசு போனால் புதிசு தானாகவரக்கூடிய சமயமுமாகும்.

ஆனால் யுத்தத்துக்கு தயார் செய்யப்பட்ட ஒரு நெருக்கடியான சமயத்தில் இம்மாதிரியான ஒரு நிலைமை அதாவது ஒரு யுத்தத்துக்குப்போன இடத்தில் ஒவ்வொரு ராணுவ வீரனும் ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிட வேண்டிய நிலைமை ஏற்பட்டு ராணுவ அதிகாரி அந்தப்படி உத்திரவு போட்ட உடன் இந்த இந்திய மயமாக்கிய போர்வீரர்கள் (வேலூரில் செய்ததுபோலவே) உடனே ராஜீனாமாக் கொடுத்து விடுவார்களேயானால் யுத்தத்தின் தன்மை என்னவாய் முடியும் என்பதை சற்று இந்திய தேசிய வாதிகளும், இந்தியா சட்டசபை பிரதிநிதிகளும், தேசியப் பத்திராதிபர்களும் சிந்தித்துப்பார்ப்பார்களாக.

இந்தியன் என்பவனுக்கு ஒவ்வொரு வருணத்துக்கும், ஒவ்வொரு ஜாதிக்கும் சாப்பாட்டில் ருசி வேறு, சமையல் செய்வதில் பக்குவம் வேறு, சமையல் செய்வதற்கு சமையல்காரனுடைய ஜாதி வேறு, சமையல் செய்ய வேண்டிய இடம் வேறு, சமைக்கப்படவேண்டிய சாமான்கள்வேறு, சாப்பிடுவதற்கு இடம் வேறு என்று இப்படிப்பட்ட அநேகமானவேறுவேறுகள்வேண்டுமானால் பிறகு இதற்குத் தகுந்த மனச்சாட்சிகளும்வேறுவேறுவேண்டுமா ஆனால்இதை விசாரித்துநடவடிக்கைநடத்தி நீதி செலுத்த சட்டசபைமெம்பர்களும் வேறு வேறு வேண்டியிருக்குமானால் இவை சாத்தியப்படுமா? என்பதை யோசித்துப்பாருங்கள். சாத்தியப்பட்டாலும் இந்த யோக்கியதை கொண்ட ராணுவத்தையுடைய ஆட்சி உருப்படி ஆகுமா? என்று கேட்கின்றோம்.

ஒரு மனிதனுடன் கூட இருந்து உண்ணுவதால் தனது யோக்கியதை கெட்டுப்போய் விடுமென்றதென்று ஒருவன் தனது உத்தியோகத்தை ராஜினாமாக் கொடுத்துவிட்டு ஓடுவதும் இதை விசாரித்து இந்தப்படி உத்திரவு போட்ட மேலதிகாரியின் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு தேசியப் பத்திரிகை எழுதுவதுமானால் இந்த நாட்டுக்கு ஒரு சுயராஜ்யம் வேண்டுமா? அல்லது இந்த நாட்டை நான் கெல்லையிலும் நெருப்பு வைத்துக் கொளுத்தி சாம்பலாக்கி சமுத்திரத்தில் கரைத்து விட்டு பாலைவனமாக ஆக்கிவிட-வேண்டுமா? என்று தான் கேட்கின்றோம்.

அன்னிய ஆட்சி இருக்கும் போதே ஏற்கனவே இந்த நாட்டை ஜமீன்தார்களும், சோம்பேரிகளான பார்ப்பனர்களுமே ஆளுகிறார்கள். இனி சுயாட்சி என்பது கிடைத்து தட்டிப் பேசவே ஆளில்லாத நிலையில் சாட்சிக்குக்கூட ஒரு அன்னியன் இல்லாத ஒரு நிலை ஏற்பட்டு விடுமானால் இந்த நாட்டு உழைப்பாளி மக்களின் கதி--தாழ்த்தப்பட்ட மக்களின் கதி என்ன ஆவது என்பது தான் நமது கவலை இந்த நாடு சமதர்ம நாடு ஆகவேண்டுமானால், இந்த நாட்டில்முதலாளிகளையும், மேல் ஜாதிக்காரர்கள் என்னும் சோம்பேரிகளையும் காப்பாற்றும், பாதுகாக்கும் அரசியலும், மற்றப்பாதுகாப்புகளும் அடியோடு அழிக்கப்படவேண்டுமானால் ராணுவத்தை இந்திய மயமாக்குவது என்பது ஒருநாளும் கூடாத காரியமேயாகும். இந்திய மயமாக்கவேண்டும்என்று சொன்னவுடனே வகுப்புவாரிஉரிமை வந்தே தீரும். ஒவ்வொரு வகுப்புக்கு ஒரு சிப்பாய்-ராணுவ அதிகாரி ஏற்பட்டே தீரும். அதிலும்கூட இப்போதையபோலவே சூட்சிக்காரர்களும், தந்திரக்காரர்களும், மேல் ஜாதிக்காரர்களும் அதிகமான எண்ணிக்கை ஸ்தானங்களை எப்படியாவது கைப்பற்றியே தீருவார்கள். இவர்கள்எப்பொழுதும் உழைப்பாளிகள்மேலும், பாட்டாளிகள்மேலும் சமதர்மத்துக்கு வாதாடுபவர்கள் மேலுமேதான் இவர்களது துப்பாக்கியையும், மிஷின் பீரங்கிகளையும் திருப்புவார்களே ஒழிய ஒரு நாளும் ஏழைகளை வஞ்சித்து அவர்களது உழைப்பைக்கொள்ளை கொள்கின்றவர்கள் மீதும் அவர்களை அடக்கி வைத்திருப்பவர்கள் மீதும் திருப்பவே மாட்டார்கள். ஆதலால் இந்த நிலையில் இந்தியா ஒரு நாளும் சமதர்ம நாடாக முடியவே முடியாமல் போய் விடும்.

ரஷியா முதலிய சில நாடுகளில் இன்று ஏதாவது ஒரு அளவில் சமதர்மங்கள் விளங்குகின்றன என்றால் அங்குள்ள ராணுவ வீரர்கள் தங்களில் ஆளுக்கு ஒரு சமையல் அறையும், சாப்பாட்டு இடமும் தேடுகின்றவர்களாய் இல்லாமல் இருந்ததுடன் அவர்களது சகோதரர்கள் மீது துப்பாக்கியைத் திருப்பாமல் அவர்களை வஞ்சித்து ஏமாற்றி அவர்களது உழைப்பை உண்டுவந்த முதலாளிகள், ஜமீன்தாரர்கள் சோம்பேரிகள் குருக்கள்மார்கள் மீது திருப்பியதினாலும் அந்தப்படி அவர்கள் திருப்பி இராவிட்டாலும் தங்களது சகோதரர்கள் மீது திருப்ப மறுத்ததாலுமே ஒழிய வேறில்லை.

ஆகையால் இந்தியாவுக்கு சுயராஜ்யம் தேடவும் ராணுவத்தை இந்திய மயமாக்கவும் முயற்சிக்கும் தேசியவாதிகளும் தேசபக்தர்களும் தேசப்பிரதிநிதிகளும் மகாத்மாக்களும் தயவு செய்து முதலில் சமையல் கூடங்களையும் சாப்பாட்டு மண்டபங்களையும் எல்லாருக்கும் ஒன்றாக ஆக்க முயற்சிப்பார்களாக.

தோழர். R. K. ஷண்முகம்.

தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் 'இந்தியா சட்டசபைக்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பது கேட்டு பார்ப்பனர்களும், அவர்களது அடிமையாயிருந்து வயிறு வளர்த்துத்தீரவேண்டிய பேறுபெற்ற பார்ப்பனரல்லாதாரும், அவ்விருகூட்டத்தினது பத்திரிகைகளும் தவிர்த்து மற்றைய எல்லோருமே ஆனந்தக்கடலில் மூழ்குவார்கள் என்பதிலையமில்லை.

தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் ஒரு பார்ப்பனராயிருந்திருந்தால் இன்று அரசியல் உலகில் மகாகனம் என்னும் பட்டம் பெற்ற சீனிவாச சாஸ்திரி பார்ப்பனரும், சர். பட்டம் பெற்று மற்றும் பல போகபோக்கியங்களையும், மாதம்20ஆயிரம் 30 ஆயிரம் வரும்படியையும் அடை சர். சி பி. ராமசாமி அய்யர்ப்பார்ப்பனரும் ஷண்முகத்திற்குப் பின்னால் 5-வது 6-வது ஸ்தானங்களில் இருப்பதற்குக்கூட தகுதி உடையவர்கள் என்று சொல்லிக்கொள்ளப்படமாட்டார்கள். மகாகனம் சாஸ்திரிக்கு தோழர்கள் கோக்கேல், காந்தி ஆகியவர்கள் வெளிப்படையாகவும், இரகசியமாகவும் ஆதரவு கொடுத்தும் அரசாங்கத்திற்கு சிபார்சு செய்தும் இந்தியாவிலுள்ள "முக்கிய" பத்திரிகைகள் என்பனவெல்லாம் (பார்ப்பனர்களை ஆசிரியராகவும்,நிருபர்களாகவும் கொண்டிருக்கும் காரணத்தால்) "சாஸ்திரி மணலைக்கயிராகத்திரித்து வானத்தை வில்லாக வளைத்து விடுவார்" என்று புகழ்ந்து வந்ததாலுமே இந்தியப் பொது மக்களுக்கு இன்ன விஷயத்தில் குறிப்பாக இன்ன காரியத்தைச் செய்தவர் என்றோ, அதனால் இன்ன பலன் இன்ன மக்களுக்கு ஏற்பட்டதென்றோ சொல்லுவதற்கு சிறிதுகூட இடமில்லாத ஒரு வாத்தியார் பார்ப்பனர் மகாகனமாகி இந்திய மக்களுடைய பிரதிநிதியென்றுஉலகம் முழுவதும்விளம்பரம் பெற்று வாழ முடிந்தது.

அதுபோலவே தோழர் சர். சி. பி. ராமசாமி அய்யருக்கும் ஹைக்கோர்ட் ஜட்ஜுகளில் இரண்டொருவருடைய சலுகையும், கோகேல், காந்தி இவர்களைப் போலவே அரசியல் உலகில் விளம்பரம் பெற்ற பெசண்டம்மையாரின் வெளிப்படையாகவும், இரகசியமாகவும் சர்க்காருக்குச் செய்த சிபார்சுகளும், மற்றும் பல வழிகளில் பெற்ற அரசாங்கத் தலைமைஅதிகாரிகளின் ஆதரவுகளும்,தேசியபார்ப்பன பத்திரிகைகளின் விளம்பரங்களும் எல்லாம் சேர்ந்து அவரையும் ஒரு பெரிய மனுஷியனாக்கச்செய்ததோடு வருஷம் பல லக்ஷம் ரூபாய் வரும்படிக்கு ஆளாக்கியும் விட்டுவிட்டது.

ஆனால் தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களுக்குத் தோழர் காந்தி முதல் எதிரியாயிருந்து முட்டுக்கட்டை போட்டவைகளையும், பார்ப்பனப்பத்திரிகைகள் செய்து வந்த விஷமங்களையும், சூட்சிகளையும் தாண்டியும் பார்ப்பனர்களின் அடிமைகளாயிருந்த பல பார்ப்பனரல்லாத கோடாரிக் காம்புகள் செய்து வந்த தொல்லைகளிலிருந்து சமாளித்து அரசாங்கத்தையும் (தோழர் மோதிலால் நேரு "தேசியவீர"ராயிருந்தபோது அவருக்கு வலக்கையாயிருந்து) எதிர்த்தும் யாருடைய தயவில்லாமலும், எந்தப்பத்திரிகையுடைய (பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் ஆகிய இருவர்களுடைய) ஆதரவில்லாமலும் மேற்படி பத்திரிகைகளின் நிருபர்களுடைய அயோக்கியத்தனமான விஷம நிருபங்களுக்கெல்லாம் மார்பைக் கொடுத்தும் தானாகவே இந்த நிலைமை அடைந்தார் என்பதை எல்லா மக்களும் அறிய வேண்டும் என்பது நமது ஆசை.

ஆ இந்த உத்தியோகத்தால் தோழர் ஆர். கே. ஷண்முகத்துக்கு மாதம் 4000 ரூபாய் லாபமே யொழிய மற்றபடி இந்திய ஏழை மக்களுக்கு-பாடுபடும் மக்களுக்கு ஒரு காதொடிந்த ஊசிக்கும் மார்க்கமில்லை என்பது நமக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் அப்படி ஒரு உத்தியோகமும், பதவியும் இருக்கும் வரையிலும் அதை ஏதாவது ஒரு மாம்சப் பிண்டமாவது அனுபவித்துத்தான் தீரவேண்டும் என்கின்ற நிலைமை இருக்கின்ற வரையிலும் வெறும் அனுமதேயங்கள் அடைந்து தாழ்த்தப்பட்ட அதாவது பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு இழிவும், தாழ்மையும் நிரந்தரமாய் இருக்கச் செய்வதற்கு பாடுபடும் மக்களோ, அல்லது இப்படி ஒரு கஷ்டமான, கொடுமையான நிலைமை ஒன்று இருக்கின்றது என்பதை அறியாத ஒரு தேசாபிமானிகமோ அடைவதைப்பார்க்கிலும் இப்படிப்பட்ட ஒரு அறிஞரும், சாமார்த்திய சாலியும், தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் கவலையும் அவர்களது தாழ்மைக்கும், இழிவுக்கும் அஸ்திவாரமான காரணத்தை நன்றாய் உணர்ந்தவரும், அதை வேருடன் களைந்து வெந்நீர் ஊற்றி பூண்டர அழிக்கவேண்டும் என்கின்ற ஆசையும் உறுதியும் கொண்டஒருவர் அனுபவிப்பதில் எந்த மூடனும் பொறாமைப்படமாட்டான்.

அன்றியும் தோழர் ஆர். கே. ஷண்முகம் இன்று ஒரு வெறும் ஆசாமி அல்ல என்றும் இப்படிப்பட்ட பட்டம் பதவி முதலிய வேட்டைகளுக்காக தேசிய வேஷமோ, வகுப்பு வேஷமோ, மதவேஷமோ, தெய்வ பக்தி வேஷமோ மகான் வேஷமோ போட்டுக் கொண்டு பாமரர்களை ஏமாற்றும் ஒரு பாஷாண்டியல்ல வென்றும், சொல்வதோடு ஜாதி, மதம், கடவுள், தேசம், வகுப்பு அரசாட்சி முதலிய சகல விஷயங்களையும் புரட்டென்று ஒதுக்கித் தள்ளி சரீரத்தால் பாடுபடும் மக்களுடைய மேன்மைக்கும், சமூகத்தால் இழிவு படுத்தப்படும் மக்களுடைய விடுதலைக்கும் உழைக்கும் உண்மை இயக்கமாகிய சுயமரியாதை இயக்க சங்கத்துக்குத் தலைவராயிருக்கின்ற ஒரு வீரராவார் என்றும் சொல்லுவோம்.

சுயமரியாதைச் சங்கமானதுபார்ப்பனர்களும், பார்ப்பனர்களது அடிமைகளாகிய பார்ப்பனரல்லாத தேசியவாதிகள் என்பவர்களும் தூற்றி வருவதும், மதவாதிகள் தூற்றி வருவதும், சர்க்காரும் கண்காணித்து வருவதும், சுயமரியாதை இயக்கமென்றாலே நாக்கு சுட்டு விடுமென்றும், சர்க்கார் கோபித்துக்கொள்வார்கள் என்றும், அதிகாரிகள் கஷ்டப்படுத்துவார்கள் என்றும் சொல்லப்பட்டு வருவதுமான ஒரு இயக்கமாகும்.

அதுமாத்திரமல்லாமல் சுயமரியாதை இயக்கம் அரசாங்கத்தையே கவிழ்க்கப்பார்க்கின்றது என்றும், மதத்தையே அழிக்கப்பார்க்கின்றது என்றும், கடவுளையே ஒழிக்கப்பார்க்கின்றதென்றும், வேத சாஸ்திரங்களை எரிக்கப்பார்க்கின்றதென்றும் பலமுண்டங்கள் ஒப்பாரி இட்டு மாரடித்து அழுவது மாத்திரமல்லாமல் அரசாங்கத்துக்கு மகஜரும், விண்ணப்பமும், தூதும் அனுப்புவதல்லாமல் பத்திரிகைகளிலும் பத்திபத்தியாய் எழுதி திண்ணைப்பிரசாரம் செய்யப்படுவதற்கு ஆளாகி இருக்கும் ஒரு இயக்கமாகும்.

அப்படிப்பட்ட ஒரு இயக்க ஸ்தாபனத்துக்குத் தலைவராயிருக்கின்ற ஒருவர் இந்தியா சட்டசபை ஸ்தாபனத்துக்கும் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டாரென்றால் அதுவும் எல்லாக்கட்சியாராலும் ஏகமனதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டார் என்றால் இப்படிப்பட்ட இவரைத் தலைவராயடைந்தது இந்தியா சட்டசபைக்கே ஒரு பெரிய கௌரவமென்றே சொல்லவேண்டும்.

ஆகவே தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களைத் தனது தலைவராகக்கொண்ட இந்திய சட்டசபையைத்தான் நாம் பாராட்டக்கடமைப் பட்டிருக்கிறோம்.

திருச்செங்கோடு.

வாலிப சகவாச சங்கம்.

11-3-33ந்தேதி வெளியிடப்பட்டிருந்த துண்டுபிரசுரப்படிக்கு 12-3-33 தேதி மாலை 4-30மணிக்கு சங்ககட்டிட மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூடப்பட்டது. கூட்டத்திற்கு பல பிரபலஸ்தர்களும், பெண்மக்களும் ஏராளமாய் கூடியிருந்தார்கள். அவ்வமயம் தோழர் ஆர். சம்பந்தம் அவர்களின் தலைமையின் கீழ் தோழர்களான டி. ஏ. கைலாசம், டி. ஏ. எஸ். லிங்கம், எஸ். கே. வரதராஜுலு முதலாயினோர், "திருவிழாக்களின் ஆபாசம்" "அக்கினிக்குண்டப்புரட்டு" "பார்ப்பனீயக்கொடுமை" என்பன பொருள்பற்றி உருக்கமாகச் சொற்பொழிவாற்றினார்கள்.

பின்னர் தலைவர் முடிவுரையுடனும், சுயமரியாதை கீதங்களுடனும் இரவு 10மணிக்கு காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. (ஒரு நிருபர்)

நாகர்கோவில்.

சுயமரியாதை இளைஞர் சங்கம்.

நாகர்கோவில் சுயமரியாதை இளைஞர் சங்கத்தின் ஆறாவது பொதுக் கூட்டம் நாகர் கோவில் முனிசிபல் மைதானத்தில்ஆரம்பமாயிற்று. 'திருவிதாங்கூர் அபிமானி' "திருவிதாங்கூர் டைம்ஸ்" ஆசிரியர் தோழர் டி. ஸி. ஜோஸப் அவர்கள் தலைமை வகிப்பதாக நோட்டீஸில் பிரசுரித்திருந்தும் எதிர்பாராது நடந்த சிலகாரணங்களால் தோழர் முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்களான ஸி. டி. இளங்கோ, பி. வள்ளியம்மாள், என். கே. நாகேந்திரன் முதலியவர்கள் "தீண்டாமை" "பெண்டிர் விடுதலை" "ஆலய ப்பிரவேசம்" என்னும் விஷயங்களைப்பற்றி சொற்பொழிவு செய்தார்கள். பின்னர் தலைவர் முடிவுரைகூற காரியதரிசிநன்றிகூறகூட்டம்சுமார் 8-30 மணிக்கு முடிவுற்றது. (ஒரு நிருபர்)

தோழர் எஸ். ராமச்சந்திரன் அவர்கட்கு அனுதாபம்.

சேலம்.

சுயமரியாதை சங்கம்.

சேலம் செவ்வாய்பேட்டை சுயமரியாதைச்சங்கத்தில் ஷை சங்கப்பார்க்கில் 5-3-33ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு ஓர் சுயமரியாதைப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் ஆர். நடேசன் அவர்களின்தலைமையின் கீழ் "வறுமையேன்" என்னும் விஷயத்தைப்பற்றி சுயமரியாதைத்தோழர்களான, ஏ.எம்.பாலு, ஜலகண்டாபுரம், எஸ். ராமநாதன் ஆகியவர்கள் வெகு விளக்கமாக, கடவுளின் பேராலும், மதத்தின் பேராலும், முதலாளிகளும், புரோகிதச் சோம்பேறிக்கூட்டமும் தொழிலாளிகளை ஏமாற்றி கொள்ளையடித்து வருவதனால்தான் வறுமை ஏற்படுகிறதென்று விரிவாகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

பின்னர் "சுயமரியாதை இயக்கத்தில் அதிதீவிரமாக உழைத்தவரும், உயர்தரக்கல்வி கற்றவருமான சமதர்மத்தோழர், சிவகங்கை எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். அவர்கள் காலஞ்சென்றதைப்பற்றி இச்சங்கத்தார் தோழர் கிருஷ்ணம்மாள் இராமச்சந்திரன் அவர்களும் அவரது குமாரரான தோழர் இராமசுப்பிரமண்யம் அவர்களுக்கும் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்." என்ற தீர்மானம் நிறைவேறிய பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம இரவு 9மணிக்கு கலைந்தது. (ஒரு நிருபர்)

திருச்செங்கோடு.

வாலிபசகவாசசங்கம்.

5-3-33ந்தேதி ஞாயிறு மாலை 4மணிக்கு சங்ககட்டிட மைதானத்தில் வாராந்திரப்பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு சங்க காரியதரிசி தோழர் டி. ஏ. கைலாசம் அவர்கள் தலைமை வகித்தார். அவ்வமயம் உள்ளூர் அபிமானிகளில் பலர்விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். தோழர்களானடி. ஏ. சங்கரலிங்கம், என். பழனிசாமி. காசிவிஸ்வநாதன் எஸ். கே. வரதராஜுலு முதலியவர்கள் ஏழைகளின் துயரம் "என்னும் பொருள் பற்றி விரிவுரை யாற்றினார்கள். தலைவர் முடிவுரையில் பார்ப்பனீயம் கடவுள், காந்தியம் முதலியன எவ்வளவு தூரம் ஏழைகள் துயரத்திற்கு காரணமாய் உள்ளன என்பதைத்தெளிவாய் விளக்கி உரைக்கப்பட்டது.

பின்னர் சுமார் இரவு 9மணிக்கு கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்ட்டது, வந்தனோபசாரத்தோடுகூட்டம்இனிது கலைந்தது.

சுயமரியாதைத்தோழர் சிவகங்கை எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். அவர்கள் காலமானது குறித்தும்; சுயமரியாதைத் தோழர் நாகை என். பி. காளியப்பன் அவர்களின் அருமைத் தாயார் காலமானது குறித்தும் இக்கூட்டம் வருந்துவதோடு, தங்களின் ஆழ்ந்த அனுதாபத்தைத்தோழர்களான ரா. கிருஷ்ணம்மாள் அவர்களுக்கும், என். பி. காளியப்பன் அவர்களுக்கும் முறையே தெரிவித்துக்கொள்ளுகிறது"

சிவகங்கை வக்கீல் தோழர் எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். அவர்கள் காலஞ்சென்றதைக்குறித்து கீழ்கண்ட சங்கங்களிலிருந்து அனுதாபத் தீர்மானங்கள் வந்திருக்கிறது அவைகள் வருமாறு:—

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம், இலங்கை ராமநாதபுரம் ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்கம், மகம்மதுசாகிப்புரம் சமதர்மசன்மார்க்க சங்கம், திருச்சி தியாகராயர் வாசகசாலை முதலியவைகளாகும்.

ஏஜண்டுகள் தேவை.

நமது "குடி அரசு" பத்திரிகையை விற்பதற்கும், சந்தாதாரர்களை சேர்ப்பதற்கும் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் கீழ்க்கண்ட இடங்களுக்குத் தேவை.

செங்கல்பட்டு
காஞ்சிபுரம்
விழுப்புரம்
புதுச்சேரி
கடலூர்
திருப்பாப்புலியூர்
திருப்பூர்
நாமக்கல்
முசிறி
குளித்தலை
கோபிசெட்டிபாளையம்
வாணியம்பாடி
பண்ரொட்டி
திருமங்கலம்
சாத்தூர்
கோயில்பட்டி
சிவகெங்கை
மணப்பாறை
போடிநாயக்கனூர்
சிதம்பரம்
சீயாழி
நெல்லிக்குப்பம்
நன்னிலம்
அம்பாசமுத்திரம்
அறந்தாங்கி
கோபமுத்தூர்
பாபநாசம்,

விபரமறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.

ரோஜா முத்தையா

திருவாரூர் செங்குந்தர் 4வது மகாநாடு.

சென்ற 12, 13-3-33-ந் தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் செங்குந்தர் மகாநாடு, வர்த்தகர் மகாநாடு, வாலிபர் மகாநாடு முதலியவைகள் நடைபெறும் மென்றறிவிக்கப்பட்டிருந்தபடி திருவாரூரில் வெகுவிமரிசையாக நடைபெற்றது. மகாநாட்டிற்கு பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

மகாநாட்டிற்கென அமைக்கப்பட்டிருந்த அழகானகொட்டகையானது மழையால் விழுந்து விட்டதால் வேறு ஒருபெரியமண்டபத்தில்நடைபெற்றது.

செங்குந்தர் மகாநாடு,

12-3-33ந் தேதி காலை 8-30 மணிக்கு செங்குந்த மகா நாட்டின் கொடியை குடியாத்தம் தோழர் மா. ஆ. வேலாயித முதலியார் அவர்கள் உயர்த்தினார். ஷியாருக்கு மகா நாட்டின் சார்பாக ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப் பட்டது.

புதுவை அரசாங்க வரவு செலவு இலாக்காத்துணைத் தலைவர் தோழர் எ. வி. முத்தையா, பி. ஏ. பி. எல். அவர்கள் மகா நாட்டைத் திறந்து வைத்தார். அவரது உபன்யாசம் சமதர்ம உபன்யாசமாகவே இருந்தது ஷை யாருக்கு மகாநாட்டின் சார்பாக ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் தி. நா. சாபதி முதலியார் அவர்கள் வரவேற்வேற்புப் பிரசங்கம் செய்தார்.

பின் மகாநாட்டுத் தலைவர் தோழர் ம. சண்முக சுந்தர முதலியார் எம். எ. எல். டி. அவர்கள் தமது தலைமைப் பிரசங்கத்தைப் படித்தார். பின் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது.

வர்த்தகர் மகா நாடு.

பின் மாலை 3மணிக்கு வர்த்தகர் மகா நாடு நடைபெற்றது. ஷை மகாநாட்டை திருப்பத்தூர் தோழர் கா. அ. சண்முக சுந்திர முதலியார் அவர்கள் திறந்து வைத்தார் ஷியாருக்கு மகா நாட்டின் சார்ப்பாக வரவேற்புப் பத்திரப் வாசித்துக் கொடுக்கப் பட்டது.

பின் வரவேற்புக் கழகத் தலைவர் திரு நாகேஸ்வரம் தோழர் வ. மு. க. பொன்னம்பல முதலியார் தமது வரவரவேற்பு உபயாசம் செய்தார்.

மகாநாட்டின் தலைவர் கோவை தோழர் வி. எஸ். செங்கோட்டையா அவர்கள் தமது தலைமைப் பிரசங்கத்தைச் செய்தார்.

வாலிபர் மகாநாடு.

ஷை மகாநாட்டை 4-30 மணிக்கு தோழர் பாவா சி. கோபால்சாமி முதலியார் திறந்து வைத்தார். வரவேற்பு கழகத் தலைவர் தோழர் ஆ. விநாயகமூர்த்தி முதலியார் தமது வரவேற்புப் பிரசங்கம் செய்தார்.

பின் மகாநாட்டுத் தலைவர் தோழா சி. பன்னிருகைப் பெருமாள் முதலியார் அவர்கள் தமது தலைமைப் பிரசங்கம் செய்தார்.

பின் தலைவர்களின் முடிவுரைகளுடன் முதல் நாள் நடவடிக்கைகள் முடிவு பெற்றது. அன்றிரவு விஷயாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மறு நாள்

மறு நாளாகிய 13-3-33ந் தேதி ஷை மகாநாடுகளின் தீர்மானங்கள் நிறை வேற்றியது பின் மகாநாடு வந்தனோபசாரங்களுடன் முடிந்தது.

மகா நாட்டிடுற்கு ஈரோட்டு தோழர்கள் எஸ். மீனாட்சி சுந்திரம், பி. எ. பி. எல். மொட்டயப்ப முதலியார், வி. வி. சி. முருகேச முதலியார், மாரியப்பா, ஈ. வெ. ராமசாமி, பொன்னம்பலம், தக்கோலம் செல்லப்பா வல்லத்தரசு, கே. வி. அழகர்சாமி முதலியவர்கள் விஜயம் செயதிருந்தார்கள்:—

நோட்டீஸ்.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1932-ஆம் O. S. No. 109
1932ஆம் I. A. No. 1637

சுப்பலக்ஷிமியம்மாள்—வாதி & மனுதார்.

தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலூகா கும்பகோணத்தில் பேட்டை வீதியில் இருக்கும் பழனிசெட்டி மகன் காளிசெட்டி—இரண்டாம் பிரதிவாதி & எதிர் மனுதார்,

உம்ம பேரில் ஷை நம்பரில் 28-6-32 தேதி ஏற்பட்டிருக்கும் Preliminary decree ப்படி தீர்டிக்ரித் தொகை வகையராவைச் செலுத்தாததால் ஷை Preliminary decree யை Final decree செய்யவேணும் என்னும் வாதி மனுக் கொடுத்திருக்கிறபடியால் ஷை மனு வாய்தா 3-4-33 தேதி ஏற்பட்டிருக்கிறது. ஷை மனு விஷயமாய் உமக்கு எதாவது ஆட்சேபணை இருந்தால் ஷை தேதியில் சமூகம் கோர்ட்டில் ஆஜராகி அறிவித்துக்கொள்ளவும இல்லாவிட்டால் உம்மபேரில் ஒரு கக்ஷியாக தீர்மானிக்கப்படுமென்று இதனால் உமக்குத்தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

C. S. குப்புசாமி அய்யர் B. A.,
வக்கீல் திருப்பூர்.

ஆதிதிராவிடர்களின் கடிதம்.

ஐயா குடியரசு பத்திராதிபர் அவர்களின் சமூகம்,

திண்டுக்கல் தாலூக்கா வடமதுரை பிற்கா சாணார்பட்டி பிற்கா சிலுவத்தூர்பிற்காமுதலிய அடியில் கையொப்பமிட்ட ஊர்களிலுள்ள ஆதிதிராவிட மகாஜனங்கள் எழுதியது:—

தோழர் காந்தியால் எங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பூராவும் நாஙகள் தெரிந்துகொண்டோம். அதாவது—எங்களின் தனித்தொகுதியின் வாயில் மண்ணைப்போட்டார். பொதுவுடமைகளில் இறங்குவதற்கு லாயக்கில்லாமல் செய்தார். ஹரிஜனங்கள் என்று எங்களை அபிமானப் படுத்தினார். இப்பொழுது இன்னும் என்னமோ எழுதியும் பாமர ஜனங்களை ஏமாற்றியும் சுயவஞ்சகமாய் மோசம்பண்ணிவருகிறார். இருடைய தீண்டாமை மசோதாவையும், ஆலயப்பிரவேச மசோதாவையும் நாங்கள் ஆதரிக்கமாட்டோம். ஷியார் எங்கள் பிரதிநிதியாகிய டாக்டர் அம்பேத்கார் என்பவரை ஏமாற்றி மோசம்பண்ணி புனா ஒப்பந்தத்தில் எய்த்து கையெழுத்து வாங்கிவிட்டார். ஷை காந்தியின் உயிர்பிச்சைக்காக எங்கள் பிரதிநிதி பரோபகாரம் வைத்து ஒப்பமிட்டார். ஆனால் இனிமேல்இவர்ஏமாற்றுசெல்லாது. எங்கள்பிரதிநிதியாகியடாக்டர் அம்பேத்கார்ஷியாருடன்ஒற்றுழைக்கப்பட்டது எங்கள் ஆசிரியராகிய தோழர் ஈ. வெ. ராமசாமியுடன் சேர்ந்து ஒத்துழைப்பாரானால் நாங்கள் சீக்கிரம் கண்விழித்து முன்னேற்றமடைவோம்.

இப்படிக்கு
காளம்பட்டி ரு. லச்சுமணன்
,, ரா. அழகன்
,, தா. ரங்கன்,
,, ஆர். அழகர்சாமி
,, எம். அழகன்
,, பூ. சி. ஆண்டி
சிலுவத்தூர் பள்ளிக்கூடத்தான்
,, சந்தைக்காவக்காரன்
இன்னும் மற்ற ஆதிதிராவிட ஜனங்கள் உள்பட

சமுத்திரம் ஆதிதிராவிட வாலிபர் சங்கம்:—

திருச்செங்கோடு தாலூக்கா சமுத்திரம் கிராமம் ஆதி திராவிடத் தெருவில் சென்ற 11-3-33 மாலை 2-மணிக்கு ஷை சங்கத்தின் ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் திருச்சங்கோடு தாலூக சின்னப்பட்டி கிராமம் கோவாப்ரேடிவ் சூபிரவைசர் தோழர் சுப்பிரமன்யம் அவர்கள் தலைமை வகித்தார். கூட்டத்திற்குசுமார் 500 ஜனங்கள் வரை கூடியிருந்தார்கள்.

தோழர் எ. கெ. ஷன்முகம் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றம் என்பதுபற்றி பேசினார்கள்.

அதன்பின் தோழர்கள் கந்தசாமி, வி. செங்கோடன், எஸ். ஆரோக்கியசாமி, எஸ். வி. கந்தசாமி, கெ. ரங்கசாமி ஆகிய கனவான்கள் "சுயமரியாதை" "நகையணிதல்," "கள்குடி ஒழித்தல்" "அநாகரீகமூடபழக்கம்" "கல்வி" "அரசியல் போக்கு"முதலியவற்றைப் பற்றி பேசினார்கள் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிந்தது.

ஒரு நிருபர்

கூத்தலூர்.

சமதர்மச்சங்கம்.

கூத்தலூர் 8-3-33இரவு 7மணிக்கு இவ்வூர் பறைச்சேரியில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தீண்டாமை விலக்கின் அவசியத்தைப்பற்றியும் மற்றும் மூடக்கொள்கைகளைப்பற்றியும் அமராவதி புதூர் இளைஞர்ஊழியர் சக்கத்தோழர்களும் இவ்வூர் சமதர்மச்சங்கக்காரியதரிசி தோழர் எஸ். எல். லெட்சுமணன் அவர்களும் மிகவும்விளக்கமாகப்பேசி இரவு 10மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

மற்றொரு கூட்டம்.

11-3-33 இரவு 7மணிக்கு இவ்வூர் சமதர்மசங்கத்தின் சார்பாக முளம்பொட்டலுக்கருகில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதற்கும் சுமார் நூறுஜனங்கள்வரை குழுமியிருந்தார்கள். தீண்டாமை விக்குக்கீதங்கள் பாடப்பெற்றதும் அமராவதி புதூர்இளைஞர் ஊழியர் சங்கத்தோழர் வி. பரமசிவன் அவர்கள் தீண்டாமை விலக்கின் அவசியத்தைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும்பொழுது இவ்வூர் உயர்ஜாதி ஹிந்துக்கள் ஒன்றுகூடி தீண்டாமை விலக்கு விஷயமாக இவ்வூரில் பேசக்கூடாதென்று கூறிகலவரம்செய்துகூட்டத்தைக் கலைத்தார்கள் என்னே! வைதீகர்களின் கொடுமை என ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

பெண் தேவை.

நான் நெரிஞ்சிப்பேட்டை அகோர தர்மசிவாச்சாரியார் சிஷியர்களில்ஒருவன். எனக்குவயது 30 மாதம்ஒன்று 40ரூபாய் சுமார் வருமானமுள்ளவன் எனக்கு பழையகால வழக்கம்போல் சடங்குகளைக்கொண்டு ஒருபெண்ணை மணம் செய்துகொண்டேன். அந்த பெண்குடும்பவிவகாரங்களை சரிவர நடத்தசக்தியற்றதாக இருப்பால் ஷை சிஷியவர்க்கத்தில் சுயமரியாதைமுறையில்ஓர்பெண்ணை மணக்கபிரியமுள்ளவனாதலால் இஷ்டமுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு தெரியப்படுத்தகோறுகிறேன்.

சி. கந்தசாமி செட்டி
C/o சி. க. சு. ஆறுமுகஞ்செட்டி
மண்டி ஈரோடு

குளூர்.
பொதுக் கூட்டம்.

9-8-33-ந் தேதி சுயமரியாதை சங்கத்திலுதாரவில் மாகாளியம்மன் உற்சவத்தை முன்னிட்டு ஒருபொதுக் கூட்டம் டாக்டர், எஸ். வி. அப்பாஜி அவர்கள் தலைமையின் கீழ்கூடியது ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். தோழர்கள் எஸ். என். சர்தசாமி, கோவை, கஸ்தூரி இவர்கள் சுயமரியாதை கீதம் பாடியபின், கோவை, தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் சுயமரியாதை இயக்க தத்துவங்களைப் பற்றி சுமார் 2மணிநேரம் சொற்பொழிவு செய்தார் அதை ஒட்டி தோழர் எஸ். கே. கருப்பணத்தேவர் பேசியபின் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறியது

"சிவகங்கை தோழர் எஸ். ராமசந்திரன் காலஞ்சென்றமைக்கு அவர் குடும்பத்தாருக்கு எங்கள் அநுதாபத்தைத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மதிப்புரைகள்.

கல்லூரணி க. அ. புன்னை முத்து அவர்களால் வெளியிடப்பட்ட "எக்ஸர்சைஸ்" நோட்புத்தகங்கள் பல வரப்பெற்றோம். அவைகளின் பின் பக்கத்தில் ஒவ்வொன்றில் ஒவ்வொருவிதம் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை விளக்கும் வாக்யங்கள் வெளியிடப் பட்டிருக்கின்றன.

பாமர மக்களும், பள்ளி மாணவர்களும் எளிதில் உணரும்படியாக வெளியிட்ட தோழர் புன்னைமுத்து அவர்களைப் பாராட்டுகிறோம்.

மொத்தமாக ஆடர் செய்பவர்களுக்கு விலை சரசமாய் கிடைக்கும்.

விலாசம்

கே. எ. புன்னைமுத்து,
"பம்பாய்ஷாப்" கல்லூரணி,
வயா அருப்புக்கோட்டை.

விசாலாட்சி அல்லது கட்டறுத்தகாரிகை.

இது 'குமரன்' பத்திரிக்கையின் உதவி ஆசிரியர் தோழர் இ. சிவம் அவர்களால் எழுதப்பட்ட ஓர்சிர்திருத்த நாவல் இது செட்டி நாட்டு வகுப்பில் நடந்த மாதிரியாய் செட்டிமார்கள் பழக்கவழக்கங்களையும் குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறது.

இந்தச் சிறு நாவலில் கதாநாயகியாகிய விசாலாட்சி [illegible] தே கைம்மையால் [illegible] வைதிகப் பித்தர்களாகிய அவளது பெற்றோர்கள் படுத்துகிற கொடுமையும், சகிக்க முடியாது தவிக்கும் விசாலாவின் மனோ நிலையும், பின்னர் இயற்கை உணர்ச்சிமேலீட்டால் கதாநாயகனாகிய தியாக ராஜனை காதலிப்பதும், இதைக்கண்ட பெற்றோர் சினம் கொள்வதும், அதன் காரணமாய் கதாநாயகர் களிருவரும் தற்கொலை செய்து கொள்வதும் படிக்க படிக்கஇனிப்பது. வாலிபரது சீர்திருத்த அவா வைதீக கிழங்களது மூட்டுக்கட்டை, மதாசார மூட்டைகட்டுப் பாடுகளுக்கும், பழக்க வழக்கங்களும் வாலிபர் பலி முதலிய சிறிய கொள்கைகள் நிறைந்தது. இனிய தமிழ் மனதை உருக்கும் சம்பவங்கள். முதலில் 6-அணாவுக்கு விற்றது விலைஅணா4 குடிஅரசு சந்தாதாரர்களுக்கு 3அணா 100 புத்தகம்(முன்பணம்) ரூ-12-8-0

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

ஈ. வெ. இராமசாமி.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேல்நாட்டு, அதாவது ரஷியா, பிரான்ஸ், ஜெர்மனி, டர்க்கி, கிரீஸ் கொழும்பு முதலிய இடங்களில் நமது இயக்க சம்பந்தமான தலைவர்களுடன் உட்கார்ந்து எடுத்த போட்டோக்கள் கீழ்க்கண்ட சைஸ் பிரகாரம் விலைக்கு விற்கப்படும்.

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ தோழர்கள் ஈ. வெ. ரா. நாகம்மையாரும், ஈ. வெ. ராமசாமி அவர்களும் சேர்ந்திருக்கக்கூடிய தனிக்காப்பி
1க்கு 0-8-0
ஷை $8\frac{1}{2}$ x $\frac{1}{2}$ சயிஸ் 1க்கு 0-12-0
ஐரோப்பாவில் எடுத்த $6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ சயிஸ் தனிப் போட்டோ burst 1க்கு 0-8-0
15 x 12 என்லார்ஜ் மெண்டு ஷை காப்பி 1க்கு 10-0-0
23 x 17 ,, ,, 17-0-0

தனிக்காப்பி வேண்டுபவர்கள் விலைக்கு மேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 6-4-0 ரூ. விதம் கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

விலாசம்:—
நியூஸ்டார் போட்டோஸ்டுடியோ,
ஸ்டேன்ஸ் ரோட்,
கோயமுத்தூர்.

அகில இந்தியா டிரேட் மார்க் ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி.
(govt Rgd)

உங்களுடைய டிரேட் மார்க்குகள், பெயர்கள், காப்பிரைட் முதலியவைகளை பிறர் உபயோகித்து உங்களுடைய நற்பெயரின் பயன்களையும் லாபங்களையும் அன்னியர் அடையாமல் இருக்கும் பொருட்டு 1908ம் வருஷத்திய XVI நெம்பர் ஆக்டுப்படி இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்து கொள்ளுங்கள். முழு விபரங்களுக்கு எழுதவும்.

ஏஜெண்டுகள்:—
கே. எல். ஜி. குப்தா அண் கோ.,
கடைவீதி, ஈரோடு.

ஓ! பலங்குன்றியவர்களே! தாதுபுஷ்டியில்லாதவர்களே! கிழத்தன்மையடைந்தவர்களே!

இதோசாப்பிடுங்கள்
தங்கபஸ்பம்

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார தாது புஷ்டியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது; பத்தியமில்லை. நாட்பட்ட அல்லது புதிதாயுண்டான எல்லாவியாதிகளையும் நீக்கி ஆண்மைத்தனத்தை உண்டாக்கி தாதுபுஷ்டியைக்கொடுக்கும்.
48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

குரு நாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆபரேஷன் அவசியமில்லை. முளை தானே கரையும், சீழ் மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும் உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

தாளக பஸ்பம்- இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8 வித காசமும் அவசியம் தீரும் அனுபவத்தில் கைகண்டது.
புட்டி 1-க்கு ரூ. 4.

அப்ரேக் செந்தூரம் - நீரழிவுக்கு

ஜாஸ்திபோகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகலமேகமும் நீங்கும். தளுக்கற்றது. புட்டி 1-க்கு ரூ. 15. வி. பி. வேறு.

வைத்திய ஆசிரியர் **மலையப்பசாமி,**
வைத்தியசாலை, பழனி, S. I.,

டாக்டர் சிங்காரம் அவர்களின்
கெந்தக நெய்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், விங்கப்புற்று, சூலை கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சாமத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, படமதப்பு, திமிர் வாய்வு, புண், புரைகள் ஆராத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரு. 10—0—0.
20 ,, ,, 4—0—0.

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்.
மலாய்நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.
முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

சி. சிங்காரம் அன் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி

(6ம் பக்கத்தொடர்ச்சி)

யஸ்ய வேஸ்மநிதிஷ்டதி விஜ்ஞாதே தூவஸங்ஸ்யத்விஜா: குர்வந்த்யநுக்ரஹம்'' (ஷை ஸ்மிருதி 6. 34) அதாவது சண்டாளன் தெரியாதவனுக ஒருவன் வீட்டிலிருந்து பிறகு தெரிந்தால் அவனும் பிராமணனே அடைந்தால் அனுக்கிரகிக்கிறார்கள். தெரியாமல் அந்த சண்டாளன் வசித்த வீட்டை ''புநர்லேபநாகமேதக ஹோம ஜப்யேஸுத்யதி ஆதாரேணசவிப்ராணும் பூமிதோஷோநவித்யதே'' (ஷை ஸ்மிருதி 6. 12) அதாவது அந்த சண்டாளன் வசித்த வீட்டுமண்ணை அப்புறப்படுத்தி மணியாசனப்படுத்தி பிராமணர்களைப் புகச்செய்து சாந்தி ஹோமம் ஜபங்களைச்செய்தால் அந்த மண் சுத்தமாகிறது. மண்ணுக்கு தனியாக தோஷமில்லை. வண்ணாத்தி, சக்கிலி, வேடன், கூடைகட்டி, இவர்களும் நான்கு வருணத்துக்கும் கடையர்கள். இவர்கள் நான்கு வர்ணத்தாருடைய வீட்டிலிருந்தாலும் மேலே சண்டாளனுக்குச்சொன்ன பிராய சித்தத்தில் பேர்பாதியும், செய்யவேண்டியதோடு அவர்களுடைய சுவாசம் பட்ட வீட்டுக்காரர்கள் மூன்றுவேளை ஸ்னானம் செய்து தயிர், நெய், பால், கோமூத்திரம், நவ அரிசி இவைகளை புசிக்கவேண்டியது. சண்டாளனைப் பார்த்தாலே சூரியனை பார்க்கவேண்டும். அவன் பேரில்பட்டால் துணியுடன் ஸ்னானம் செய்யவேண்டும். அவனோடுவழிநடந்தாலும் காயத்ரி மந்திரத்தை ஒரு தரம் ஸ்மரித்து சுத்தனாகவேண்டும். சக்கிலி சண்டாளர் இவர்களோடு பேசினால் பிறகு பிராமணர்களோடு பேசியும், காயத்ரியை ஜபித்தும் சுத்தமாகவேண்டியது. சண்டாளனால் வெட்டப்பட்ட குளம், சண்டாளன் பாத்திரம்பட்ட கிணறு, இவைகளின் தண்ணீரை அருந்திய பிராமணன் முறையே ஒரு நாள், மூன்று நாள், உபவாசமிருந்து கோமூத்திரத்தை அருந்தி சுத்திஅடையவேண்டியது. ஆனால் சண்டாளன் பாத்திரத்திலிருக்கும் ஜலத்தை சாப்பிட்டுவிட்டால் அந்த ஜலத்தை வாந்திபண்ணவேண்டும். அப்படி செய்யாமல் அந்த ஜலம் உடம்போடு செரித்துவிட்டால் ஸாகதபன மென்கிற விருதத்தை செய்யவேண்டும். க்ஷத்திரியன் குடித்தால் பிராஜாத்தியம், வைசியன் குடித்தால் பிராஜாபதியத்தில் பாதியும், சூத்திரன் கால்பங்கும், பிராய சித்தம் செய்துகொள்ளவேண்டும். இப்படி சண்டாளனையும், இதர வகுப்பாரையும், ஒதுக்கி நான்கு வர்ணத்தார் செய்யவேண்டியவை ஷை ஸ்மிருதியில் பிராயசித்தகாண்டம் 22 முதல் 29 வரை 36, 45 லும் சவிஸ்தாரமாக சொல்லப்பட்டிருக்கிறது. வர்ணாச்சிரம விதிப்படி விலக்கப்பட்ட சண்டாளனை ஒரு பிராமணன் கொலை செய்துவிட்டாலும் பாதகமில்லை. ''சண்டாளம் ஹதவாங்கச்சித் ப்ராம்மணோ யதிகம்சந. ப்ராஜாபத்தியம் சரேக்த்ருச்சரம் கோத்வயம் தக்ஷிணும்ததத் க்ஷத்திரியேணுபிவைஸுயே நஸுத்ரேணைதேவரேணவா. சண்டாளஸ்யவதேப்ராப்தே க்ருச்ரார்தோநவிஸுத்யதி'' (ஷைஸ்மிருதி 6. 19. 20) இதன்பொருள்:- பிராமணன் ஒரு சண்டாளனைக்கொன்றால் அவன் பிராஜாபத்திய கிருச்ரத்தைச்செய்து இரண்டு கோதனம் செய்யவேண்டும். க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், சண்டாளனைக்கொன்றால் அரைகிருசரம்செய்தால்சுத்தனாகிறான் இவைபோன்றவைகள்இன்னும்அநேகம்சொல்லலாம். தீட்டு என்றபதமே உலகிற்கு அறிமுகப்படடதற்கு வர்ணதர்மத்தை நடத்திவைக்கும் ஸ்மிருதிகளின் தீண்டாமை என்றபதம் அடிக்கடி சேர்த்து எழுதப்பட்டிருப்பதே போதிய சான்றாகும். உயர்வுதாழ்வு என்பதும் பிறவிச்செருக்கு இளைத்தோரை துன்புறுத்தல் ஆகிய கொடுமைகள் ஜனசமுதாயத்தின் உள்ளத்தில் நன்கு பதிந்திருப்பதற்கு காரணம் மேலே எடுத்துக்காட்டிய பராசரஸ்மிருதியின் ஆதாரங்கள் என்பது ஒருபுறமிருக்கட்டும் கடந்த மூன்று யுகங்களின் தர்மங்களும் இதைவிட மிகமோசமானதாகும். 'மகாத்மா' காந்தி முக்கியமாய் எடுத்துக்கொண்டிருக்கும் பகவத்கீதையில் வர்ணதருமத்தின்படி மேலே சொன்ன தத்துவங்களையும் சேர்த்து சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. சதுர் வர்ணங்களுக்கு தெய்வீக ஞானமும், தனமும் உண்டு என்று சொல்லும் 'மகாத்மா'வின் கருத்தைஅவருடைய கீதை சுலோகமே பொய்மைபடுத்தி விடுகிறது.

பகவத்கீதை சுலோகமாவது:—

''பிராஹ்மண க்ஷத்திரிய விசாம் சூத்ராணாஞ்ச பரம்தப கர்மாணிப்ரக்த்கானிஸ்வபாவப்ரவைர்கிணே: சமோ தமஸ்தபச்செளசம் க்ஷாந்திரார் ஜாவமேவச கஞ்யானமாஸ்திச்யம் பிராஹ்மம கர்மஸ்வபாவஜம்''

(இ—ள்) பிர்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திர வர்ணங்களில் அவரவரியற்கைக்குணத்தால் கருமங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சமம், தவம், சுத்தம், பொருமை, நடுவு நிலைமை, கஞ்யாணம், விக்ஞானம், கடவுள் உண்டென்பதும், தர்மம், மறுமை உணடென்று நம்பிக்கை இவைகள் வேதியருக்குறிய (பார்ப்பனர்க்கு) இயற்கை தருமம் ''செளர்யம் தேஜோர்த்ருதிர்த ரக்ஷ்யம் யுத்தேசாப்யபலாயனம் தானமீச்வாபாவச் சக்ஷத்ரம் கர்மஸ்வ பாவஜம்''

(இ—ள்) செளரியம், புகழ், தைர்யம், சாமர்த்தியம் போரிற்புறங்கொடாமை, தானம், ஆளையாற்றல் இவை க்ஷத்திரியனுக்குரிய இயற்கை தருமமாம்.

''க்ருஷிகோப சுவாணிஜ்யம் வைச்ய கர்மஸ்வபாவஜம்'' (இ—ள்)உழவு ஆன்நிறைகாத்தல் ஏனைப்பசுவின் மேய்த்தல் இம்மூவகையில்வாணிபம் செய்தல் வைசியனுக்குரிய இயற்கை தருமமாகும்.

''பரிசர்யாத்மகம் கர்மசூத்திரஸ்யாபி ஸ்வபாவஜம்'' பணிசெய்து நின்றல் சூத்திரனுக்குரிய இயற்கை தருமமாம்.

'சாதுர்வர்னியம்
மயாசிருஷ்டம்
பரிசரியாத்மகம்
கர்மம் சூத்ரஸ்வியாபிபாவஜும்'

நான்கு வர்ணங்களும் என்னால் சிருஷ்டிக்கப்பட்டவை அவற்றுள் பிராமணனுக்கு சிசுருஷைதான் சூத்திர தர்மம் என்பது இத்தகைய கீதா சுலோகத்தாலும் ஸ்மிருதி பிரமாணங்களாலும் எதிர் காலத்தில் நடைபெறுவதென்ன? ''மகாத்மா'' அவர்கள் செய்யும் வியாக்கியானங்களும் தத்துவார்த்தங்களும் சங்கரர், ராமானுஜர், தயானந்தர், சொன்னது மாதிரியே தவிர வேறல்ல.

''துர்யோதனாதிகள் மனிதர்கள் அல்ல. ஆன்மானவப் பீடித்திருக்கும் துர்குணங்கள் கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனை கொல்ல ஏவவில்லை. அவனுடைய அழுக்காறுகளை சுத்தி செய்துகொள்ளவே சொன்னார். என்பதாக கீதைக்குத் தத்துவார்த்தம் சொல்வதுமாதிரி வர்ணாச்சிரமத்துக்கும். ஜாதிமுறைக்கும் தத்துவார்த்தம் சொல்லி வியாக்கியானம் சொல்லலாமே ஒழிய வேறில்லை. தீண்டாமைக்கும், உயர்வு தாழ்வுக்கும், ஜாதியையும்; வர்ணத்தையும் சாஸ்திரத்தையும், சம்மதப்படுத்தக்கூடாதென்று காந்தி சொல்வதை யோசித்துப்பாருங்கள். மேலே குறிப்பிட்டிருக்கும் ஸ்மிருதி பிரமாணங்களில்இருந்தும்வர்ணாசிரமத்திலிருந்தும், ஜாதிக்கொடுமையிலிருந்தும், தீண்டாமைக்கொடுமை பிரித்து தனித்த விஷயமாய் கருதமுடியுமா? சண்டாளர்களுக்கு (தீண்டாதாருக்கு) நல்ல உடை, உணவு, படிப்பு, குடி இருப்புபோன்ற செளகரியங்களுக்கு ஸ்மிருதிகள் கட்டளையிடுகின்றதா என்பதைப்பாருங்கள். ஆகவே தீண்டாமைக்கொடுமை மாத்திரமல்ல. இந்து சமூகத்தின் பேரால் நடக்கும் கொடுமைகள் அத்தனைக்கும் பிறப்பிடம் வர்ணாசிரம தர்மமேயாகும். வர்ணாச்சிரமதர்மத்தைப்பற்றி தோழர் காந்தி அவர்களே சரியாய் உணர்ந்துகொள்ளவில்லை என்பதை வாசகர்கள் அறியவேண்டும். தோழர் காந்தியார் முன் ஒரு தரம் வர்ணாசிரமத்துக்கு வியாக்கியானம் செய்யும்போது சூத்திரர்கள் ஏராளமாக பணக்காரர்கள் ஆக ஆசைப்படக்கூடாதென்றார். இப்போது சதுர் வர்ணங்களுக்கு தெய்வீக ஞானமும், தனலாபமும்உண்டு என்கிறார். நாட்டுமக்களை அகில உலகத்தார் முன்னிலையிலும் காட்டிக்கொடுப்பதற்கு மனு கௌதமர், சங்கரர், பராசரர், முதலிய ரிஷிகள் செய்த ஸ்மிருதிக்கட்டளையைப்போலவே தோழர் ''காந்தியும் ஒரு ஸ்மிருதி கட்டளையை உலகத்தார் முன் சமர்ப்பித்திருக்கிறார். அதாவது ''வர்ணாசிரமதர்மங்களில் கூறப்படும் நான்கு வர்ண தர்மங்களிலும் எனக்கு நம்பிக்கை உண்டு.

நான்கு வர்ணதர்மப்பாகுபாடுகள் பரம்பரையான தொழில்களைப்பொருத்தே ஏற்பட்டவை. அதாவது 1. பிராமணர், 2. க்ஷத்திரியர், 3. வைசியர், 4. சூத்திரர்.

இவர்களுக்குத் தொழில்களாவன:

பிராமணர் உபதேசம் செய்தல், கல்விகற்பித்தல்.

க்ஷத்திரியர் பகைவர்களினின்று காத்தல்.

வைசியர் வியாபாரம், விவசாயம் செய்தல்.

சூத்திரன் சரீரத்தால் உழைத்து மேல்கண்ட மூன்று வருணத்தாருக்கும் ஏவல் வேலைசெய்தல்.''

இதுதான் காந்தியினுடைய வர்ணதர்மமுறை என்பதாக ஏற்கனவே செய்த வியாக்கியானம். இன்று செய்யும் வியாக்கியானமென்னவெனில்:-

''தற்போது வர்ணாசிரமதர்மமோ அன்றி ஆசிரமதர்மமோ அனுஷ்டானத்திலிருக்கவில்லை என்பதேஎனது அபிப்பிராயம். தற்சமயம் எந்த வர்ணம் அனுஷ்டானத்திலிருக்கிறதென்று யாராவது கேட்பார்களாகில் சூத்திர வர்ணமே இருக்கிறதென்றே கூறுவேன் என்று 11-2-33 ல் சொல்லிஇருக்கிறார். தோழர்கள் டி. ஆர். ராமச்சந்திர அய்யர், டி. எம். கிருஷ்ணசாமி அய்யரும் கலியுகத்தில் பிராமணன் ஜாதியும், சூத்திரஜாதியும்தான் இருப்பதாகச்சொன்னார்கள். ஆகவே வர்ணாசிரமத்தின் பூரணமான புராதீன அமைப்பு நசித்துப்போகாமல் வைத்துக் கொள்வதற்கு அதை பின்பற்றுவதாகச் சொல்கிறவர்களுக்கே முடியவில்லை. முடியவும் முடியாது. முடியாத ஒரு காரியத்தில் காந்தியார் கவனம் செலுத்தி காலத்தை கடத்துவானேன்? வர்ணாசிரமம் வகுக்கப்பட்ட காலத்திலேயே யுகவாரியான தர்மங்களை முன்கூட்டியே அக்கால ரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது நடக்கும் கலியுகத்தில் வர்ணாசிரமதர்மத்தின் ஆட்சி அடியோடு அழிந்துவிடுமென்பதை புராதன காலத்து இருடிகளே உணர்ந்திருந்தும் தோழர் காந்திஅவர்கள்மாத்திரம் வர்ணாசிரமத்தை புதுப்பித்து நிலை நிறுத்திவிடுவதாகநினைப்பது அவரின் கீதை ஆராய்ச்சிக்கு மாறுபட்டதாகும். கலியுகத்தில் புண்ணியம் நசித்துப்பாபமே தழைத்தோங்குமென்பதை ரிஷிகள் ஞானத்தால் முன்னமேயே தெரிந்துகொண்டிருப்பதை வெளிப்படையாக சொல்லியுமிருக்கிறார்கள்.

''க்ருதே பூத்ஸகலோ தர்மஸ்த்ரேதாயாம் த்ரிபதிஸ்ம்ருத: பாத: ப்ரவிஷ்டோதர்மஸ்ய மசசரக்வேஷஸம் பவ தர்மா தர்மாஸமென பூத்வாத் விபாதெனத்வாப ரேதிதென திஷ்யேதர்மஸ்த்தித: பானதர்த்தரம:

சுயமரியாதை உபதேச மொழிகள்.

(பருத்தித்துறை, சுயமரியாதை சங்க பிரசுரம் 1.)

ஆஸ்திகளிலும், பொருளிலும், நடத்தையிலும், இன்னும் பிறவற்றிலும் அடிமைப்பட்டிருக்கும் ஏழைத்தோழர்களே! சற்றுகவனியுங்கள். நினைவு கூர்ந்து பாருங்கள்!! பார்த்து பகுத்தறிவை உபயோகியுங்கள்!!!

இதோ! உலகில் பெரியநெருக்கடி உண்டாய்விட்டது. தொழிலாளிகள் லக்ஷோபலக்ஷம் தொழில் இல்லாமல் வருந்துகிறார்கள். பசிப்பிணியும் நாளுக்குநாள் விருத்தியாகி வருகிறது. ஆகையால் இன்னோரன்ன இடர்களை நீக்க வழிதேடுங்கள். வந்தது வந்தது ஆழ்கலத்து அன்னகவி அணைகட்டுங்கள்! அணைகட்டுங்கள்!!

ஏழைகள் எத்தன்மைப்பட்டாலும் சரி; அவைகளைப்பற்றியே கவலை இல்லை. அவையெல்லாம் ஊழின் பயன், பாவமென்று சொல்லி முதலாளிகளான பணக்காரர்களும், கடவுட்தரகரான பார்ப்பான், பாதிரி, புத்தகுருக்கள் முதலியவர்களும் ஏழைமக்களான லட்சாதி லட்சம் மக்களிடம் ஏமாற்றிப்பொருள்தேடி மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் கட்டிச்சகல துறைகளிலும் முன்னேறி “இந்திர” சம்பத்தடைந்து ‘மோட்சம்’ என்றும் இன்பவாழ்வடைகின்றனர். இன்னதன்மைத்தான பணக்கார முதலாளிகள் ஏழைகள் ஆனவர்கள் தம்மைப்பார்த்துத் துவேஷங்கொள்ளாவண்ணம், மதமாகிய கோட்டையால் தலைவிதி, முன்ஜென்மம், மறுபிறப்பு பாவபுண்ணியம், சுவர்க்கநரகம் வேதாகமம் கடவுள்வாக்கு முதலிய தப்பபிப்பிராயங்களால் பகுத்தறிவென்னும் எதிரியை சுட்டழித்து விடுகிறார்கள். இவைகள் எல்லாம் பணக்காரத்தன்மையைக்காக்க அன்றோ? இவர்கள் அற்புதான் என்னே? இன்னோரன்ன அபாசங்களை வெளிப்படுத்துவதற்காக பருத்தித்துறை சுயமரியாதைச்சங்கத்தாராகிய நாங்கள் இப்பிரசுரத்தை வெளியிடுகிறோம்.

(1) கடவுள் மக்களைக்காப்பாற்றுவதற்காக இருக்கிறார். ஆனால் நீங்களோ கடவுளைக்காப்பாற்றுவதற்காக ப்பாடுபடுகிறீர்கள். அதற்காக எத்தனைகோயில்கள், சேட்சுகள், சமாதிகள், மசூதிகள் கட்டினீர்கள். விழாக்கள் எவ்வளவு செய்தீர்கள். இவைகட்கு எவ்வளவு பணஞ்செலவழித்தீர்கள்; எத்தனை விளைநிலங்களை தருமசாதனஞ்செய்தீர்கள். கடவுள் உங்களைக்காப்பாற்றயிருக்க நீங்கள் அவரைக்காப்பாற்றமுயலுவது உங்களது அறியாமை அல்லவா? காப்பாற்றக்கூடியகடவுள் எதற்காக நிலைமைகளை னவற்றை உண்டாக்கினார். சர்வவல்லமை சர்வாபீஷ்டம் உள்ள அவரை நீங்கள் எப்படிக்காப்பாற்றலாம். விருப்பு, வெறுப்பற்றவர்க்கு நீங்கள் கொடுப்பதால் பலனென்ன? நீங்கள் கொடுப்பதை அவர்சாப்பிடுகிறாரா? இல்லையாயின் நீங்கள் ஏன்கொடுப்பானேன்? நீங்கள் காக்கப்புகின் அவர் உங்களைக்காப்பதுபொருந்துமா? நீங்கள்காப்பாற்றாது விட்டால் அவர்இறந்துவிடுவாரா? இறந்துபடின்அவரைக் கடவுள் என்றுசொல்லுவது எப்படி? உங்களுக்கு நன்மைசெய்ய இருக்கிற கடவுளுக்கு, நீங்கள் பொருள் வசிக்க இடம்கொடுப்பின் அன்னாரை வெண்டாமென்பதே “சுயமரியாதை” இதை ஆமோதிப்பவர்களாகிய நீங்கள் கடவுளுக்கு வீடுகட்டவேண்டாம். ஆறுநேரம் சாப்பாடு போடவேண்டாம். கற்பூரம் கொழுத்தவேண்டாம். விளக்குவைக்கவேண்டாம். திருவிழாசெய்யவேண்டாம். தேவடியாளை அழைக்கவேண்டாம். பாதிரி குருக்களுக்குக்கொடுக்கவேண்டாம். பொங்கிப்பூசைபோடவேண்டாம். இவைகளைச்செய்து குட்டிச்சுவரானதன்றி வேறென்ன அடைந்தீர்கள். “தரைமீது தெய்வங்களே தாகங்களைக்தாய் பொருள்பறித்தால் அரைவயிற்று ஏழைமக்கள் அடையுங்கதி அடிமையன்றோ?” என்னும் இசைச்செய்யுளை படியுங்கள்.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதேன வ்யவஸ்த்திதா. இதன் பொருள் கிருதயுகத்தில் தர்மங்கள் முழுவதும் நடந்தன. திரேதாயுகத்தில் மூன்று பாதங்களுடையனவாய் இருந்தன. மச்சரம், துவேஷம் உண்டாகிற அதர்மத்தின் ஒருகால் அவற்றுள் கலந்திருந்தது. துவாபரயுகத்தில் தர்மம் பாவம் இவ்விரண்டு கால்களால் ஒத்தனவாகி வியாபித்தன. கலியுகத்தில் மூன்று காலுடன் நிற்கின்றன. தர்மம் ஒருகாலுடன் நின்றது. ஆகவே நாம் வாழும் கலியுகமென்று சொல்லப்படும் இந்தக்காலத்தில் பாவம் மூன்றுகாலுடன் நர்த்தனம் புரிவதாக புராதன ஞானிகள் முடிவு செய்திருக்கிறார்கள்.

மூன்று காலுடன் பாபமூட்டையை தாங்கி நர்த்தனம்புரியும் கலியுகத்தை காந்தியார் வர்ணாசிரமத்தை புனிதப்படுத்துவதின்மூலம் எப்படி செய்துவிடமுடியும்? பாவத்தை சுமக்கவே கலியுகம் பிறந்திருப்பதாக கருதும் புராதன ரிஷிகள் வாக்கு பொய்யையாகுமா! ராமாயணம் பின்பு நடக்கப்போவதாய் வால்மீக முனிவர் ஞானதிருஷ்டியால் உணர்ந்து முந்தியே வால்மீகிராமாயணத்தை எழுதிமுடித்தார். ராமாயண சம்பவம் நடக்கப்போவதென்ற விபரம் முன்னமேயே உணர்ந்தாலும், அக்கிளர்ச்சியை அடக்குவதற்கு அக்காலத்து ரிஷிகளோ! ஞானிகளோ! முயற்சிக்கவில்லை. அக்காரியத்தில் கடவுள் முதல்கொண்டு அவதாரம் செய்து உதவி புரிந்திருப்பதாக சரித்திரத்தில் படித்திருக்கிறோம். அதேபோல் கலியுகத்தில் பாவம்தலை தூக்கும், வர்ணதர்மம் அழியும் என்பதாக முன் கூட்டியே ரிஷிகள் சொல்லியிருப்பதால் வர்ணாசிரமத்தை காப்பதென்பது காந்தியாரால் முடியுமா என்பதை யோசித்துப்பாருங்கள். ஆகவே காந்தியார் வர்ணாசிரம வேலையை எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை. அது அழிவதென்றாலும் அழியட்டும். வர்ணாசிரமம் பரிபூரணமாக அழிந்து பாவமே மேலோங்கி நிற்கும் காலத்தில் பகவான் அவதாரம் செய்து அடக்குவதாக சதாசர்வகாலமும் தோழர் காந்திபடிக்கும் கீதையில் உபதேசித்திருக்கிறார். ஆகவே வால்மீகி எழுதிய கதைக்கு கடவுள் ராமனாக அவதரித்து எல்லாம் செய்தார். கலியுகத்தில் பாவம் மேலோங்குவதாக முன்னமே ரிஷிகள் உணர்ந்திருப்பதால் அதற்கும் கடவுள் அவதரிக்கவேண்டும். அவதரிப்பதாகவும் கிருஷ்ணன் சொல்லியிருக்கிறார் அதைப் பற்றி காந்திக்கு வேலை இருக்கவேண்டிய நியாயமில்லை. (தொடரும்)

—

மலாய்நாட்டில் தனவைசிய தம்பதிகளுக்கு வரவேற்பு.

காரைக்குடியிலிருந்து 31-1-33-ல் உபுறப்பட்டு மலாய்நாடு சென்ற தோழர்கள் ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கம் தம்பதிகளுக்கும், சு. சி. தண்ணீர் மலையான் தம்பதிகளுக்கும் கீழ்கண்ட விடங்களில் வரவேற்புபத்திரங்களும், பாராட்டு கூட்டங்களும் நடந்திருக்கின்றது. அவை வருமாறு:—

சிரம்பான், தனவணிக இளைஞர்கள், ஷெ சீனர்கள், சுங்குறும்பை, கோலகஞ்சார், ஈப்போ, கோலாலம்பூர், மலாக்கா, மூவார், பத்துபகாட், தாஞ்ஜோங், சிங்கப்பூர் முதலிய இடங்களாகும். (ஒரு நிருபர்)

சுயமரியாதை தத்துவ கீதங்கள்.

கடம்பக்குளம் தோழர் நாராயணன் பாடியது. நல்ல கௌரவமான பாட்டுகள், பாரதியார் மெட்டுகள். தோழர் ஈ. வெ. ராமசாமி படத்துடன் கூடியது. நல்ல காகிதம், நல்ல அச்சு, எளிய விலை அணா, 0—4—0.

விலாசம்:—

குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை பை- 0-0-6 100- புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினால் 100-புத்தகம் தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

இந்தியாவின் குறைபாடு.

160 பக்கம் 0—8—0. 100 புத்தகம் 25—0—0. தபால் செலவு வேறு.

முன் பணம் வராதஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது. தபால் செலவு சேர்த்தனுப்பாத ஆர்டர்களுக்கு தபால் செலவுக்காக வி. பி. எடுத்துக் கொள்ளப்படும்.

மதமும் லெனினும்.

100 பக்கம் விலை அணா 0—4—0. 100 புத்தகம் 12-8-0 தபால் செலவு வேறு.

ஜார்ஜ் பெர்னாட்ஷாவின், அமெரிக்க சொற்பொழிவும், பத்திரிகைபிரதிநிதிகளுக்கு அளித்த சேதிகளும்.

விலை அணா 0—1—0. 100 புத்தகம் 3—0—0. தபால் செலவு வேறு.

இவைகளில் 100 புஸ்தகங்கட்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கட்கு மேற்கண்ட குறைந்த விலைக்குக் கொடுக்கப்படமாட்டாது. இதற்குக்கமிஷன் இல்லை.

விலாசம்:-- மானேஜர்
‘குடி அரசு” ஈரோடு.

‘சமத்துவபோதினி’

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. நைனன்.

வருஷ சந்தா—2—8—0
விலாசம்:—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்.

குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பாரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேலும் நாம் செய்யும் அளவற்ற தபசுகளால் நாம் புரியும் சகல பாவங்களையும் அவர் மன்னிக்கக் கடமைப்பட்டுள்ளார். பிரமச்சரிய விரதம் மிகவும் பெருமை பொருந்தியதும், நமக்கே உரியதானதுமாகும். ஆனால் நாம் பிறரால் தாங்க முடியாத பாரத்தை அவர்கள் பொருட்டுத் தாங்கவேண்டிய நிருத்தலின் நம்முட் சிலர் அதை பொறுக்க முடியாமல் தவறுவதும் இயற்கையே. ஒருமாதத்திற்கு ஒருமுறை இம்மாதிரி தவறுதல் இழைத்தல் சகஜமாதலின் அர்ச்சிஸ்ட் லிகோரி என்பார் அதற்காக அந்த வாலிபப் பாதிரிகளை குறைகூறுதல் தகாதென கூறியுள்ளார். இன்னும் நம்முடைய வேத சாஸ்திரிகள் கூட இதற்கு மிக்க சலுகை காட்டுகின்றார்கள்" என்று சொன்னார்.

அவர் கூறிய இந்த உத்தரமானது எனக்கு ஒரு சிறிதும் சமாதானமுண்டாக்கவில்லை. அவைகள் தான் உண்மையை மெதுவாய்—நயமாய் நழுவ விடும்படி தூண்டுவதாக எனக்குப் புலப்பட்டது. நான் மனத்தாங்கலோடும், ஆத்திரத்தோடும் அவரிடமிருந்து திரும்பினேன். அந்தப்பெண்ணை மறுபடியும் அனுப்பித் தன் பரிதாபகரமான சரித்திரத்தை கூறுமலிருக்கச் செய்யும்படியாகக் கடவுளைப்பல முறை பிரார்த்தித்தேன். சுமார் 26 வயதுள்ள ஒரு வாலிபனாயிருந்த என் உள்ளத்தில் அந்த அன்பான அழகிய நிற்கதியுள்ள கட்டழகியின் வார்த்தைகள் ஆயிரம் பாம்புகள் தீண்டிய விஷத்திற்கொப்பாகத் துன்புறுத்தியது.

அவள் வெளிப்படுத்திய பாவக் கூற்றுக்கள் அவள்பால் கொண்டுள்ள எனது நல்லபிப்பிராயத்தைக்கெடுக்க முடியவில்லை. அதற்கு மாறாக அவள் மீது எனக்கு இரக்கமும் பச்சாதாபமுமே அதிகரித்தது. அவள் என் பாதங்களில் விழுந்து தேம்பியழுத கண்ணீரும் பாதிரிமார்கள் கேட்டதாக கூறிய ஆபாசமான மோசக் கேள்விகளின் மீது அவளுக்கிருந்த துவேஷமும் என்மனதில் மேலும் மேலும் அவளைப் பற்றி நல்லபிப்பிராயத்தை உண்டாக்கியது. மாது சமாரிட்டன் (Samaritten women) போலும் மகதலேனா மரியாள் போன்ற பல பாவையர்களின் ஏசுவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டு தேவனருகில் சென்றதுபோல் இவளும் மோட்ச சாம்ராஜ்யத்தை எய்துவாளென்றே நான்கருதினேன்.

நான் மேரியிடம் குறித்த அந்நாளில் பாவசங்கிதப் பெட்டியினருகிலிருந்து வேறொரு மனிதனிடம் பாவமன்னிப்புப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தபொழுது அவளும் பெட்டியினருகில் வந்து முழங்காற் படியிட்டு நின்றாள். அவள் முன்னிலும் தன்னையதிகமாக மறைத்துக்கொண்டிருந்த போதிலும் அவளுடைய உருவத்தோற்றத்திலிருந்து அவள்தான் மேரியென்று நன்கறிந்து கொண்டேன். அவளுடைய தகப்பனார் வீட்டிற்குப்பல சந்தர்ப்பங்களில் சென்றிருந்த பொழுது அவள் பியானோ என்ற சங்கீதக் கருவியை மீட்டி சமயக்கீர்த்தனைகள் பாடிக்கொண்டிருந்தது என் ஞாபகத்திற்கு வருவதாயிற்று. அவளுடைய நடையின் பொலிவும் தோற்றத்தின் வடிவும் அவளுடைய மாறுவேடத்தைமாற்றி அவளின் உண்மைத்தோற்றத்தையே வெளிப்படுத்துவதாயிருந்தன.

அவள் கேட்ட வாக்குத்தத்தத்தை நான் உடனே யான் எதிர்ச்சையாய் கொடுத்திருப்பேன். ஆனால் கர்த்தரிடம் அவள் மனங்கசிந்து கண்ணீர் சொரிந்து மன்னிப்புக்கேட்க வேண்டும் கருத்துடனே சும்மாயிருக்க வேண்டியவனானேன்.

அப்பொழுது நான் அவளுடைய காதைத்தாராளமாகப் பிடித்துச் சிலுவையின்பால் அறைபட்டுள்ள ஏசுநாதரிடம் மெதுவாக அழைத்துச் சென்று அவளை தன் கண்ணீரால் அவருடைய பாதங்களைக் கழுவச்செய்து அவளுடைய அன்பு என்னும் எண்ணெய் கொண்டு அவருடைய கையிலுள்ள புண்ணை பாகாத் தடவச் செய்து "நீ சாந்தியுடன் செல்வாயாக உன் பாவங்களனைத்தும் மன்னிக்கப்பட்டன" என்ற வார்த்தைகளை மட்டுங்கூறி அவள் மனதைச் சமாதானஞ் செய்யச் சக்தியற்றவனாக இருப்பதனிமித்தம் விசனிக்கவேண்டியவனாயிருக்கிறேன்.

ஆனால் பாவசங்கிதனப் பெட்டியினருகிலிருக்கும் பொழுது என்னைக் கர்த்தருடைய சேவகன் என்று கூறுவதற்குமிடமில்லை. மற்றும் என் மனசாட்சியின்படி நடக்கும்படியான மனிதனென்று சொல்வதற்குமிடமில்லை. ஏனெனில் நான் அங்கு போப்பினுடைய சேவகனாகவேயிருக்கவேண்டியதிருந்தது. அந்த இடத்தில் மனச்சாட்சியின் தூண்டுதலை யப்புக்களித்து தெய்வீக உள்ளுணர்ச்சியையும் உதாசீனம் செய்ய வேண்டியவனாயிருக்கிறேன். அவ்விடத்திலே என்மனச்சாட்சியானது ஒன்றிற்கும் உரிமையற்றதாயிருக்கிறது. என் அறிவு ஒரு செத்த பிணமாகவேயிருக்கிறது. போப்பினுடைய வேத சாஸ்திரிகளையே நான் கேட்டு அதன்படி நடக்கவேண்டியதிருக்கிறது. அங்கு நான் ஒருவரையும் காப்பாற்றக்கூடிய நிலையிலில்லை. ஆனால் அழிப்பதற்கு மட்டும் வசதியுடையவனாயிருக்கிறேன். ஏனெனில் பாவங்களை அதிகரிக்கும்படியாக்கி நான் அவர்களுடைய ஆத்மாக்களை நிசத்தனமான நிலைக்குக்கொண்டு வந்து நாசமே செய்பவனாகிறேன்.

என்னிடத்திலமர்ந்திருந்த மனிதனை அனுப்பிவிட்டு நான் அவளிடம் திரும்பி எங்களிருவருக்கும் நடுவிலிருந்த துவாரத்தின் வழியாக "நீ உனது பாவ சங்கிதனத்தை ஆரம்பிக்கச் சித்தமாயிருக்கின்றாயா?" என்று கேட்டேன்.

ஆனால் அவள் மவுனமாயிருந்தாள். "ஓ கர்த்தரே! எனதுயிர் மீது இரங்கும் பாவியாகிய என்னுடைய ஆத்மாவை உமது பரிசுத்த இரத்தத்தால் சுத்தஞ்செய்ய சமர்ப்பிக்கின்றேன். அடியேனைப் புறக்கணியாதிருப்பீராக" என்பதாக அவள் தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

திருப்பித்திருப்பி அவளிரு கரங்களையும் நீட்டி மேலே நோக்கிய வண்ணமாக அழுதழுது பிரார்த்தித்தவண்ணமாகவே இருந்தாள். நான் அவளைக் கவனித்துக் கொண்டிருந்ததாக அவள் கருதவில்லை; எங்களிருவருக்கும் இடையிலுள்ள சிறு துவாரம் அடைக்கப்பட்டிருந்ததாகப் பாவித்தாள் போலும். ஆனால் என்னிரு கண்களும் அவள் மீதே பதிந்திருந்தன. கண்ணீர் தாரை தாரையாக வடிய தாபித்து, என்னையும் மறந்து அவளுடைய பாதார சித்தங்களை அவள் சார்பாக பிரார்த்தித்தேன். அவள் இரக்கமுள்ள சர்வேஸ்வரனிடம் இரண்டறக்கலந்திருந்ததால் அச்சமயத்தில் அவளுக்குத் தொந்தரவு கொடுக்க மனமில்லாதவனாயிருந்தேன். சிறிது நேரஞ் சென்ற பின்னர் கைதட்டி சத்தஞ் செய்து துவாரத்தின் பக்கத்திலிருந்து மெதுவாக என் அன்பார்ந்த சகோதரியே பாவசங்கிதனம் செய்ய நீ தயாராயிருக்கின்றாயா என பொதுவாக வினவினேன்.

தனது முகத்தை சற்றே என் பக்கத்தில் திருப்பி நடுக்கமானதொனியில் "ஆம்! ஆம்!! என் ஞானத் தந்தையே நான் தயாராயிருக்கிறேன்" என மொழிந்தாள். ஆனால் அவள் வார்த்தையை நான் சரிவர உணருவதற்குள்ளாகவே அவள் மறுபடியும் தேம்பித் தேம்பி அழுது பிரார்த்தனை செய்ய ஆரம்பித்துவிட்டாள்.

நானும் சற்று நேரம் ஜெபித்துவிட்டு என் அன்பார்ந்த சோதரியே! நீ தயாராகயிருந்தால் தயவு செய்து பாவ சங்கிதனத்தை ஆரம்பிப்பாயாக என்று கேட்டேன். அவள்,

"ஞானத் தந்தையே! நான் அன்று கேட்ட வாக்குத்தத்தங்கள் நினைவிருக்கின்றனவா? நான் தங்களிடத்தில் வைத்திருக்கும் அபிமானத்தையும் கடவுளிடத்தில் கொண்டுள்ள பயபக்தியை புரிந்து தங்களிடத்தில் என் பாவங்களை வெளியிடச் சொல்லுகின்றீர்களா? என் ஆத்மநாசத்திற்கு மூலகாரணமாயிருந்த அந்த ஆபாசக் கேள்விகளைத் தாங்கள் என்னிடம் கேட்பதில்லையென்பதாக வாக்குறுதி செய்ய ஒத்துக்கொள்கின்றீர்களா? கர்த்தர் ஒருவரைத் தவிர, ஏனெனில் அவர் எனது கடவுளாயிருப்பதாலும் அதை அவர் முன்னமே உணர்ந்தவராயிருப்பதாலும் வேறு எந்த மனிதனிடத்திலும் வெளியிட்டுச் சொல்லத்தகாத அத்தகைய பெரும்பாவங்களை நான் செய்திருக்கிறேன் என்பதை முன்னேயே தங்களிடம் தெரிவித்துக் கொள்ள ஆவலுள்ளவளாயிருக்கிறேன். வேண்டுமானால் நான் அவருடைய பாதங்களில் விழுந்து புரண்டு அழுது மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். மேலான கிறிஸ்து மதப்பெண்கள் ஒரு ஆடவனிடம் சொல்லத்தகாத வார்த்தைகளை நான் தங்களிடம் கூறி அந்த அபத்தத்தையும் நான் மேற்கொள்ள வேண்டும்"

என்பதாகக்கூறினாள். அதற்கு நான் "பிரியமுள்ள சகோதரியே! நான் இச்சையாய் எதையும் செய்ய சக்தியுள்ளவனாயிருந்தால் உன் விருப்பத்தை நிறைவேற்றியிருப்பேன். ஆனால் கத்தோலிக் திருச்சபையின் பிரதிநிதியாயிருப்பதால் அதன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவனாயிருக்கிறேன். அதன் மூலம (திருச்சபை மூலம) போப்களும் வேத சாஸ்திரிகளும் எங்களிடம் விபர

மாய் தங்களுடைய பாவங்களை வெளிப் படுத்துகிறவர்களுக்கேயல்லாமல் பிறருக்குப் பாவ மன்னிப்புக் கொடுக்கக் கூடாதென்பதாகக் கண்டிப்பான உத்திரவிட்டிருக்கிறார்கள். தவிரவும் நீ செய்த பாவங்களின் சகல விபரங்களையும் அவற்றின் காரண காரியங்களோடு தெளிவாக வெளிப்படுத்த வேண்டியது அத்யாவசியம் என்பதாகவும் திருச்சபை கட்டளையிடுகிறது, மேலும் எங்களுடைய பெரிய சாஸ்திரிகளெல்லாம், மன்னிப்புக்கொடுக்கும் நாங்கள் உங்களிடத்தில் சந்தேகம் ஏற்படக்கூடிய எல்லா இடங்களிலும் தக்க கேள்விகள் கேட்டுத்தான் தீரவேண்டுமென்பதாகக் கூறியிருக்கிறார்கள் என்று அறிய நான்மிகவிசனிக்கிறேன்." என்று சொன்னேன்.

இதைக்கேட்டதும் அவள் தன் காதில் நாராசத்தை ஊற்றியதே போன்று விரிட்டெழுந்து "அந்தோ! கர்த்தரே நான் ஒழிந்தேன்! ஒழிந்தேன்" என்று பிரலாபித்தாள்.

அவ்வாறு கூறிய அவள் வாய்மொழிகள் ஒரு பேரிடியே போல் என் காதில் ஒலித்தது. தவிர, துவாரத்தின் வழியாய் யான் பார்த்தபொழுது அவள் மூர்ச்சித்து அடியற்ற மரம்போல் சாய்ந்து விழுந்தது எனக்கு அதிகமான கவலையையுண்டுபண்ணிற்று. அவளுடல் பூமியிற் சாயும்பொழுது அவள் தலை பாவசங்கீதப் பெட்டியில் அடிபட்டதை நான் நன்றாக அறிந்தேன்.

நான் உடனே ஒளிவிலும் மிக விரைந்து வெளிவந்து அவளைவாரி யெடுத்துப் பிடித்த வண்ணமாய் அருகில்நின்ற இரண்டுமனிதர்களை அழைத்து மெதுவாய் அவளைத் தூக்கிச் சென்று ஒரு பெஞ்சின் மேல் படுக்கவைத்தேன். அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்து மூச்சையைத் தெளிவிக்க முயன்றேன். அவள் முகம் இறந்தவர் முகம் போன்று வெளுத்திருந்தது. அவள் உதடுகள் பரபரப்பாயசைந்து கொண்டிருந்தன. அவள் வாய் விட்டு "நான் ஒழிந்தேன் நான் ஒழிந்தேன்" என்று கூற முயன்று கொண்டிருப்பதை நான் உணர்ந்தேன்.

பின்னர் நாங்கள் பரிதாபப்பட்டு அவள் குடும்பத்தாரிடம் சேர்த்தோம். அங்கே அவள் வாழ்தல்—ஒழிதல், இவற்றினிடையே ஒரு மாத காலமாய் ஊசலாடித் தவித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஏற்கனவே பாவமன்னிப்பு அளித்த முதலிரண்டு பாதிரிகள் அவளறையில் அவளருகில் சென்ற பொழுது மிக வணக்கமாகவும் அழுத்தமாகவும் வெளியேறும்படி கண்டிப்பாகக் கேட்டுக்கொண்டாள். அவள் என்னை மட்டும் பிரதிதினமும் வந்து செல்லும்படியாக மன்றாடிக்கேட்டுக்கொண்டாள். தான் இன்னுஞ் சில நாட்களே உயிருடன் இருக்கப்போவதாகவும், அதற்குள்ளாக அவள் மனதைப்பரிசுத்தஞ் செய்து மோட்ச லோகத்தின் கதவைத்திறக்கும் நேரத்தையுணருவதற்கான வழியை புணர்த்தும்படியும் மன்றாடினாள்.

ஒவ்வொரு நாளும் நான் அவளிடம் சென்று அவளுடன் அழுதவண்ணமாகவே இருந்து பிரார்த்தனை செய்து வந்தேன்.

பல முறை அவளை பாவசங்கீதனம் செய்து கொள்ளும்படி நான் வற்புறுத்திக் கூறிய பொழுது அவள் மிக்க உறுதியாக மறுத்தது எனக்கு மிகவும் சொல்லொணு ஆச்சரியத்தை விளைவித்தது.

ஒருநாள் அவளிடம் தனித்து அவள் மரணப்படுக்கையின் அறையிலிருந்து அவள் கஷ்டத்தைப் பார்த்து சகிக்க முடியாது திகைத்து இருந்த பொழுது அவள் "ஞான தந்தையே தாங்கள் என் இவ்வாறு துக்க முற வேண்டும்" என வணக்கமாய்க் கேட்டாள்.

நான் அதற்கு "நானேயுன் கொலைக்காரனாயிருக்கிறேன். உன்னுடைய கொலைக்காரனிடத்திலே நீ இவ்வாறு அன்புடன் நடந்து கொள்வது தகுதியாமோ. எனது அன்பிற் குரிய ஒரு நேசனைக் கொலை புரிந்ததை நினைத்தே யழுகிறேனே யொழிய வேறில்லை" யென்பதாக பதில் கூறினேன். எனது விடை மிக்க துன்புறுத்துவதாகத் தெரியவந்தது. சிறிது நேரம்அழுது மௌனமாய்ப்பிரார்த்தனை செய்த பின்னர் அவள் என்னைப்பார்த்து "தாங்கள் எனக்காக அழவேண்டாம். ஆனால் தங்களிடத்தில் பாவமன்னிப்புப் பெறவரும் பெண்களைக் கற்பழித்து மோசஞ் செய்யும் அநேக பாதிரிகளுக்காகவே நீர் அழவேண்டும். பரிசுத்தத் திருச்சபையின் ஒழுங்கின்படி நடைபெறும்தபஸ் மிக்க புனிதமாயிருக்குமென்று நான் நம்புகிறேன். ஆனால் பாவசங்கீதம் என்ற கொள்கையில் பெருத்த தவறுதல் எக்காரணத்தாலோ ஏற்படுகிறதுஉண்மையே. இதுஒருரகசியமாக மூடி வைக்கப்பட்டுவருகிறது. ஆனால் அவ்விதகுற்றங்கள் எக்காலத்தும் வெளிவராமலிருத்தல் தகுதியா? தங்களுடைய அருமைக்குழந்தைகள் பாவமன்னிப்புப் பெறச்செல்லும் பாதிரிகள் கையிற் சிக்குண்டு எவ்வாறு கற்பழிகின்றார்கள் என்பதை எங்கள் பெற்றோர்கள் உணரும் நாள் என்றுளோ அந்நாளிலேதான் இந்தப்பாதிரிகளின் கொட்டம் அடங்கப்போகின்றது. என் தகப்பனார் முதன் முதலில் எனக்கு பாவமன்னிப் கொடுத்தலின் பேரால் என்வாழ்வை அழித்த பாதிரிகளை உணர்வாராயின் அவர்களின் உயிர்களை வாங்காது விடமாட்டார் என்பது நிச்சயம்" என்று கூறினாள்.

அதைக்கேட்ட நான் கண்ணீர் சொரிந்தேனேயல்லாது பிறிதொன்றும் கூறவழியின்றி இருந்தேன்.

இவ்வாறு நாங்களிருவரும் சிறிது நேரம் ஒன்றுந்தோன்றாது மௌனமாயிருந்தபொழுது அவளே "தாங்கள் முதனுளில் நான் பாவசங்கீதஞ் செய்யமறுத்ததால் வெறுப்படைந்தீர்கள் என்பது மெய்யே. ஒரு உண்மையும்,நல்லொழுக்கமும் உடைய பாதிரியைப்போன்று தாங்களிருந்தீர்கள். ஆனால் தங்கள்என் சார்பாக வேறொன்றும் செய்ய முடியாதிருந்ததற்கு காரணமாக இருந்தது திருச்சபையின் ஏதோ சில கட்டளைகளாகத்தானிருக்குமென்பதை நான் நன்கு உணர்கிறேன்" என்று பகர்ந்தாள்.

(தொடரும்.)

ஆதிதிராவிடர்கள் வீடு அக்னிமயம்.

8-3-33-தேதி மாலை சுமார் 4-மணிக்கு தாராபுரம் தாலூகாபச்சாபாலையம் கிராமம் கன்னிடியாபாளையத்தில் 16 ஆதி திராவிடர்கள் வீடு தீக்கிரையாகிவிட்டது. இதனுல் சுமார் 2000 ரூபாய் நஷ்டமாகி விட்டது. ஒரு நிருபர்.

The Rational Books Publishing Society Ltd.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்.

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

—:0:—

மூலதனம்: ரூ. 30,000.

பங்கு 1க்கு ரூ. 10 வீதம் கொண்ட 3000 பங்குகளாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி நிறுவிய இக்கழகம் அறிவியல் நூற்கள் பல எழுதியும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூற்களையும் விஞ்ஞான நூற்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுவதுடன் தமிழிலுள்ள அறிவியல் நூற்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கையையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதியைத் தோன்றச்செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்க முன் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்ளிகேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10ல் ரூ. $2\frac{1}{2}$ வீதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் வாய்தா பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு: — விபரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. இராகவன்,

காரியதரிசி, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,

43, கச்சேரி வீதி, ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
2.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
3.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
4.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
5.	ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் ...	0—6—0
6.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை	0—6—0
7.	மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0
	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
	The crux of the Indian Problem By Dr. P A R A N J P Y E (in English.) விலை ரூ.	1—0—0
	"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ.	0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

சுயமரியாதை இயக்கத் தோழர்கள்.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, முதலிய எல்லா தலைவர்களது படமும் 6½ x 4¾ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. 8½ x 6½ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 6—4—0 வீதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் 8½ - 6½ சைசில் உள்ள படம் ரூ 1—0—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். முன்பணமில்லாத ஆர்டரை கவனிக்கப்படமாட்டாது.

விலாசம்:—

பாலு & Co.,
No. 3 ஒப்பனைக்காரத்தெரு,
ஈரோடு

சுயமரியாதை தங்கரத்தினத் தெம்பாங்கு.

இது விருதுநகர் 3-வது சு. ம. மகாநாட்டின்போது ஈ. வெ. ரா. முன்னிலையில் படிக்கப்பட்டது. சுயமரியாதைக் கொள்கை முழுதும் தழுவிய அரிய பாடல்கள் வாய்ந்தது.

புத்தகம் 1க்கு விலை	ரூ.	0-1-0
,, 12க்குத் தபாற் செலவுள்பட	,,	0-12-0
,, 100க்கு ,,	,,	5-4-0
தனிப்பிரதி வேண்டுவோர்		0-1-6

அணா ஸ்டாம்புஅனுப்புதல்வேண்டும்.

M. R. மத்தரன், கல்லார்பட்டி.
காசிபாளையம் போஸ்டு,
[திண்டுக்கல் வழி]

ஏஜண்டுகள் தேவை

சென்னை மாகாணத்தில் சிறந்த தேசீய "வெடிகுண்டு" என்னும் தமிழ்வாரப்பத்திரிக்கைக்கு இன்றே நன்கு வாரத்திய பிரதிகளுக்கு அட்வான்ட்சாக முன்பணம் கட்டி நமது ஏஜண்டாக பதிவுசெய்துகொள்ளுங்கள். ஏஜண்டுகளுக்கு மாத்திரம் பிரதி ஒன்றுக்கு இரண்டு பைசாவீதம் கமிஷன் கொடுக்கப்படும். வருட சந்தா ரூ2—0—0 ஆறுமாதத்திற்கு 1—1—0 வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூ3—0—0. தனிப்பிரதி விலை அரையணா. முன்பணம் கட்டாத எந்த ஆர்டர்களையும் அங்கீகரிக்கப்படமாட்டா.

மானேஜர்
"வெடிகுண்டு"
தெற்குவாசல், மதுரை.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு	ரூ.	3—0—0.
வெளிநாடு	ரூ.	5—0—0.

விலாசம்:—

மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

உங்கள்.

கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

பண்டிட் ஆனந்தரின்,

அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துக்கொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய், குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு; செயற்கை வைத்தியமாகிய நவதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ன அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.

விலை அணா 0—4—0

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப் பட்டது. இதன் விலை அணா. 0—8—0.

இராமாயண ஆராய்ச்சி.

முதற் பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதன் விலை அணா. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதன் விலை அணா 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.

விலை அணா 0—1—0.

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதன் விலை அணா 0 2—0

கடவுளும், பிரபஞ்சமும்.

''கடவுள்'' என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்வினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0 8—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0

Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

"கடவுளும், பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.